வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.12.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 359 | பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# பெரும் மின்சார நெருக்கடி அடுத்த ஆண்டில் ஏற்படும்!

## பல தரப்புகளும் முன்னெச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 02

மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை தயாராகி வருகிறது. இந்நிலையில், பெரும் மின்சார நெருக்கடியை நாடு எதிர்கொள்ளவுள்ளது என்று பல தரப்பினரும் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர்.

15



# சொகுசு பஸ்ஸை ரயில் மோதியதில் ஒருவர் பலி!

## அரியாலையில் நேற்று துயரம்

யாழ்ப்பாணம், டிசெ. 02

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முயன்ற சொகுசு பஸ்ஸை ரயில் மோதித் தள்ளியதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

அரியாலை - ஏ. வி. வீதியில் நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் நாயன்மார்கட்டை சேர்ந்த தனபாலசிங்கம்

15

# மின்சார சக்தி படகுகளை அறிமுகப்படுத்தத் திட்டம்!

## கடற்றொழில் அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

மீனவர்களின் எரிபொருள் பிரச்னைக்கு தீர்வு காண அடுத்த வருடம் முதல் மின்சார மோட்டார் படகுகள் அறிமுகப்படுத்தப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த அமைச்சின் ஆலோசனைக் குழுவில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மின்கலங்களை பயன்படுத்தி 100 கிலோமீற்றர் தூரம் பயணிக்

15

# சிதம்பரத்துக்கு பயணிகள் செல்ல கப்பல் சேவையை ஆரம்பியுங்கள்!

## சிவசேனை அமைப்பு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 02

காங்கேசன்துறையிலிருந்து புதுச்சேரிக்கு கப்பலில் வழிபடு பயணிகள் சிதம்பரத்துக்கும் சபரிமலைக்கும் போவதற்கு உடனடியாக கப்பல் சேவையைத் தொடங்குமாறு சிவசேனைத் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன், வட மாகாண ஆளுநரின் முன்னாள் இணைப்புச் செயலாளர் சுமணபாலா ஆகியோர் நேற்று கொழும்பில் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் ருவான் சந்திராவைச் சந்தித்துக் கோரினர்.

ஜூன் 15 அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கப்பல் சேவையைத் தொடங்குமாறும்

15

# சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம் கற்க நிதியுதவி!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என சட்ட ஆய்வு பேரவை எடுத்துள்ள தீர்மானத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை. சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம்

15

# சர்வதேச பல்கலைக்கழகங்களை நாட்டில் நிறுவ வாய்ப்பு ஏற்படுத்துக!



## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, டிசெ. 02

சர்வதேச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளை இலங்கையில் ஸ்தாபிக்க வாய்ப்பு வழங்க வேண்டும் என்று ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு - செலவு திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும்,

இலங்கை மாணவர்களில் பெரும்பாலானோர் வருடாந்தம் சுமார் 3 பில்லியனுக்கும் அதிகமான நிதியை செலவழித்து வெளிநாட்டு

15

# அதிகரித்த போதை பாவனையால் எய்ட்ஸ் நோய் பரவலும் அதிகரிப்பு

## வடக்கில் இந்த ஆண்டு 137 நோயாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டில் மட்டும் 137 எய்ட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதிகரித்துவரும் போதைப்பொருள், ஆண்களிடையேயான பாலியல் தொடர்பும் இதற்கு காரணம் என்று பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு விசேட மருத்துவ நிபுணர் தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள்

15

# 42.9 சதவீதமான குழந்தைகள் மந்தபோசணையால் பாதிப்பு!

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் 5 வயதுக்கு குறைவான குழந்தைகளில் 42.9 சதவீதமானோர் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் குடும்ப நல பிரிவின் மதிப்பாய்வில் இந்த தரவு வெளியிடப்பட்டுள்ளது.

15

# யாழில் நெல் பயிர்களில் நுனிகருகல் தாக்கம் உயர்வு!

## வடக்கு பதில் விவசாய பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ். மாவட்டத்தில் காலபோக நெற் பயிர் செய்கையில் பயிர்களில் பொட்டாசியம் பற்றாக்குறையால் நுனி கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாக வட மாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்தார்.

யாழ். மாவட்டதில சுமார் 13 ஆயிரம் ஹெக்ரெயர் பரப்பில் நெல் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், சாவகச்சேரி, கைதடி, நவாலி, கோப்பாய், கரவெட்டி, சண்டிலிப்பாய், காரைநகர் போன்ற பிரதேசங்களில் பயிர்களில் பொட்டாசியக் குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறைபாட்டின்

15

# குளத்தில் மூழ்கி ஒருவர் மரணம்!

தென்மராட்சி, டிசெ. 02

குளத்தில் நண்பர்களுடன் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

தென்ராட்சி - வரணியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மூன்று பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் மணி

15

## பெரும்...

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்கு தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

கடல் சீற்றம் காரணமாக கப்பல்கள் வருவதில் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால், ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னதாக 38 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைய வேண்டும் எனவும் அடுத்த வருடம் அதிக நேர மின்வெட்டுக்கு செல்லாமல் இருக்க அதனை உடனடியாக செய்ய வேண்டும் என்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த ஒகஸ்ட் 10 ஆம் திகதி 'பிளாக் சான்ட்' எனப்படும் நிறுவனத்துக்கு நிலக்கரி தொடர்பான விலைமனுவை வழங்கும்போது இலங்கை நிலக்கரி நிறுவனம் உரிய நடைமுறையை பின்பற்றாமையால் குறித்த விலைமனு இரத்து செய்யப்பட்டது.

ஆறு மாத கால கடன் அடிப்படையில், இந்த விலைமனு வழங்கப்படவிருந்தது. கொடுக்கல் வாங்கல் இரத்தானதையடுத்து, இலங்கை நிலக்கரி நிறுவனத்தால் மீண்டும் நீண்டகால மற்றும் குறுகிய கால இரண்டு விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் அவற்றில் ஒன்றுகூட வெற்றியடையவில்லை.

இதனால் பழைய விநியோகஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவிருந்த நிலக்கரியை ஏற்றிய 21 கப்பல்களுக்கு உடனடியாக பணத்தை செலுத்த வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டது.

இதனிடையே, கடந்த வருடம் நிலுவையான பணத்தையும் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டியேற்பட்டதுடன், அந்த நிறுவனத்திற்கு மேலும் 14 மில்லியன் டொலர் பணத்தை செலுத்த வேண்டிய நிலையை இலங்கை நிலக்கரி நிறுவனம் எதிர்கொண்டது.

தற்போதைய நிலையில், கொள்வனவு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாட்டில் ரூபாயோ அல்லது டொலரோ இல்லையென இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதம் 6 கப்பல்கள் வீதம் அடுத்த தவணைக் காலத்துக்கு முன்பாக நிலக்கரிக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தற்போது 12 கப்பல்களை நாட்டுக்கு கொண்டுவர வேண்டியுள்ளதாகவும் நிலக்கரி நிறுவனம் சுட்டிக்காட்டியது.

எனினும், டொலர் மற்றும் ரூபாய்க்கான நெருக்கடி காரணமாக அவற்றில் அரைவாசியை மாத்திரமே கொண்டுவருவதற்கான இயலுமை உள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் கூறியுள்ளது.

இதற்கமைய, தற்போது கையிருப்பில் உள்ள நிலக்கரியானது எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி வரை மாத்திரமே போதுமானதாக உள்ளதாகவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, 2 மணித்தியாலம் 20 நிமிட மின்வெட்டை மேலும் 2 நாட்களுக்கு அமுல்படுத்த இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், டிசெம்பர் 15ஆம் திகதி வரை இந்த மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிற்றர் தளத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில்...

ஆரம்ப அறிகுறியாக முதிர்ச்சி அடைந்த இலைகள் கடும் மஞ்சள் நிறமாவதோடு பொட்டாசிய பற்றாக்குறை அதிகமாகும் போது இலைகள் நுனியில் இருந்து அடிவரை செம் மஞ்சள் நிறத்திலிருந்து மஞ்சள், கபில நிறமாக மாறும்.

அதாவது இலையின் நுனிப்பகுதியல் தலை கீழ் 'வி'(எ) வடிவில் எரிவுகள் ஆரம்பிக்கும். இலை நுனியில் இருந்து இறக்கத் தொடங்கும்.

இதன் காரணமாக மட்டம் பெயர்தல் பாதிக்கப்படுவதுடன் தாவர வளர்ச்சி குன்றி பயிர்கள் கட்டையாகக் காணப்படும் நிலையில் நெல் மணிகள் பதர் ஆகும். இதனால் பெருமளவு உற்பத்தி இழப்பு ஏற்படும்.

விவசாயிகள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நெற் செய்கையில் போசணை முகாமைத்துவத்தை அதிகரிக்க முடியும்.

பொட்டாசியம் அடங்கிய இரசாயன பசளைகளை சிபாரிசுக்கு அமைய இடல், பொட்டாசியம அடங்கிய திரவ பசளையை சிபாரிசுக்கமைய விசிறல், மேலும் வைக்கோலில் அதிகளவு பொட்டாசியம் காணப்படுவதனால் அடுத்த போகத்தில் வைக்கோலை இட்டு உழவு செய்தல், நெல் அடிக்கட்டைகளை (ஒட்டுக்கள்) அறுவடையின் பின்னர் உழுதுவிடல் கிளிசிரியா இலைகளை வயலில் தூவிவிடல் வேண்டும் இதன் மூலம் நைதரசன் மற்றும் பொட்டாசியம கிடைக்கக் கூடியதாக இருக்கும் - என்றும் கூறினார். (ஐ)

## அதிகரித்த...

பணிமனையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக எயிட்ஸ் தினமானது 1988ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி 'சமத்துவத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப் பொருளில் இலங்கையில் கொண்டாடப்பட்டு வரும் அதே வேளையில் 4,686 எச்.ஐ.வி நோயாளர்கள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 3,377 பேர் ஆண்களாகவும் 1,309 பேர் பெண்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆண் பெண் விகிதாசாரத்தை எடுத்துக் கொண்டால் 7இற்கு ஒன்றாக காணப்படுகின்றது.

வட மாகாணத்தில் 137 பேர், மன்னார் மாவட்டத்தில் 11 பேர் எச் .ஐ .வி நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையும் ஆண்களுக்கு இடையேயான பாலியல் தொடர்பு காரணமாக எச். ஐ. வி .தொற்று ஏற்படுகிறது. இதனைத் தடுக்கும் முகமாக பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவினர் இது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் முகமாக பல்வேறுபட்ட மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

தவிர எச்.ஐ.வி நோயாளிகளுக்கு சிகிச்சை அவர்களுக்கான இரத்தப் பரிசோதனை ஆகியவற்றையும் வழங்கி வருகிறார்கள் - என்றார். (ஐ)

## சிதம்பரத்துக்கு...

சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைக்கு ஆயிரக்கணக்கான இலங்கை சிவனடியார்கள் செல்வதற்குக் கப்பலை விட வேண்டும்.

2023 ஜனவரி முதல் 10 நாட்களும் சிதம்பரத்தில் நடைபெறுகின்ற மார்கழித் திருவிழாவுக்கும் அதே காலத்தில் கேரளம் சபரிமலையில் நடக்கவுள்ள மகர சாந்தி தொடர்பான திருவிழா நாள்களுக்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அடியவர்கள் செல்வதற்கு வசதியாக அரசாங்கம் கப்பலை விட வேண்டும் என அவர்கள் இருவரும் வலியுறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சர்வதேச...

பல்கலைக்கழகங்களில் கற்கிறார்கள்.

நாட்டில் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை காணப்படும் பின்னணியில் நாட்டை விட்டு வெளியேறும் டொலரை தக்கவைத்துக்கொள்ளவும், மாணவர்களின் உயர் கல்வி தேவைகளை பூர்த்தி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற வகையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளை இலங்கையில் ஸ்தாபிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.

கல்வி கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை கண்காணிப்பதற்கு உரிய திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உயர் கல்வி நிறுவனங்களுக்கான வாய்ப்பு விரிவுப்படுத்தப்பட வேண்டும்.பல் வேறு காரணிகளினால் தேசிய கல்வி முறைமை தொடர்பில் சமூக கட்டமைப்பில் அதிருப்தி நிலை காணப்படுகிறது.

ஆகவே, கல்வி முறைமை நவீன உலகத்துக்கு பொருந்தும் வகையில் மாற்றியமைப்பது காலத்தின் தேவையாகும். இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான தேவையை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும்.

இலவச கல்வி ஒட்டுமொத்த மாணவர்களின் கல்வியை பாதிப்படுத்தியுள்ளது. இலவச கல்வியின் வகிபாகம் தனியார் கல்விக்கு இணையானதாக அமைய வேண்டும். ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் கல்வித் துறைக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

இருப்பினும் ஒருசில காரணிகளினால் கல்வி தொடர்பான நிலையான கொள்கை வகுப்பு தொடர்ந்து தாமதமான நிலையில் உள்ளது,ஆகவே புதிய கல்வி கொள்கைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்து செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## சட்டக்...

கற்க வேண்டுமாயின் அவர்களுக்கு பகுதியளவு நிதியுதவி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். ஆங்கிலம் கற்பதில் தவறேதும் உள்ளதா என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வரவு - செலவு திட்டம்மீதான விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், "சட்டக்கல்லூரி மாணவர்கள் இனி ஆங்கில மொழியில் மாத்திரம்தான் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்ற தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்ன?", என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "சட்ட ஆய்வு பேரவைதான் அந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இது அரசாங்கத்தின் நிறுவனமல்ல, சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் அந்தப் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளார்கள். ஆகவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை.

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டுமாயின், அதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஆங்கில பாடநெறிக்கான கட்டணத்தை பகுதியளவில் செலுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தலாம், ஆங்கில மொழி கற்பதில் ஏதேனும் தவறு உள்ளதா? என்றார். (ஐ)

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அரசறிவியல்துறை மற்றும் அரசறிவியல் துறை பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்' எனும் தலைப்பில் தொடர் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்-1இல் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் "இனப் பிரச்னை சார்ந்து அரசியல் தீர்வுக்கான வாய்ப்பும் யதார்த்தமும்-2022" எனும் தலைப்பில் உரையாடவுள்ளார். இந்தக் கருத்தரங்கு, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மின்சார...

கக்கூடிய மின்சார மோட்டார் படகுகளை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இதற்காக நாளொன்றுக்கு 86 ரூபாயே செலவாகும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தெரிவு செய்யப்பட்ட 2500 நன்னீர் நீர்நிலைகளில் அடுத்த வருடம் மீன் குஞ்சுகளை விடுவிக்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

## சொகுசு...

சுரேந்தர் (வயது -31) என்பவரே உயிரிழந்தார். கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு பயணித்த எக்ஸ்பிரஸ் ரயிலுடன் மோதுண்டே இந்த விபத்து நிகழ்ந்தது.

இந்தப் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியதுடன், இதனை பாதுகாப்பான புகையிரதக் கடவையாக மாற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## 42.9 சதவீதமான...

மந்த போசணையால் அதிகம் பாதிக்கப்பட்ட - 59.4 சதவீதமான குழந்தைகள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்றனர் என்று தெரிய வருகின்றது. இந்த மாவட்டத்தில் 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளில் ஐந்தில் மூவர் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 12.2 வீதமாகக் காணப்பட்டது. இது 15.3 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குளத்தில்...

வண்ணன் (வயது -37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த நபர், நேற்று முன்தினம் குளத்தில் நீராட சென்றிருந்தார். அப்போது, நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தார். அவரை நீண்டநேரமாக தேடியும் காணாத நிலையில் குடும்பத்தவர்கள் தேடிச் சென்றனர்.

அவர் தனியாகக் குளத்தில் நீராடிக்கொண்டிருந்ததை அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் அவதானித்திருந்தனர். இதனால், அவர் நீரில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரவிரவாக தேடியபோதும் அவர் மீட்கப்படவில்லை.

இந்நிலையில், நேற்றுக் காலை தொடர்ந்த தேடுதலில் அவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02 -03)

## இப்படியும் நடக்கிறது...!

கனடாவில் தற்போது வாழும் எமது 'ஈழநாடு' உறவு எஸ். ஜெகதீசன், யாழ்ப்பணத்தில் பணியில் இருந்த ஒருநாள். அப்போது ஆசிரியராக இருந்த அதிபர் சபாரத்தினம், அன்றைய ஆங்கில பத்திரிகை ஒன்றைப் படித்துவிட்டு, 'அட அதுக்குள்ள போய்ச் சேர்ந்திட்டார்...' என்று கூறியவாறு 'இதை செய்தியாக்கி குடும்' என்று ஜெகதீசனிடம் கொடுத்துவிட்டு தனது இருக்கைக்கு சென்றுவிட்டார்.

கொழும்பில் வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் தனது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார் என்பது தான் செய்தி. அவருக்கு (அவர் பெயரைப் போட்டு) அறுபது என்பது தான் செய்திக்கு தலைப்பு. ஆனால், தலைப்பை படித்துவிட்டு சபாரத்தினம் மாஸ்ரர், அவர் அறுபதில் மறைந்து விட்டார் என்று எண்ணிக் கொண்டு, அதனை செய்தியாக்க சொல்ல, ஜெகதீசனும், அவர் அறுபது வயதில் காலமானார் என்று செய்தியை எழுதிக் கொடுத்து விட்டார்.

ஜெகதீசன் பத்திரிகையைப் படித்துதான் செய்தியை எழுதினார். ஆனால், அவர் இறந்துவிட்டார் என்று சபாரத்தினம் மாஸ்ரர் சொன்னதுதான் ஜெகதீசனின் மனதில் ஓடிக்கொண்டிருந்ததால், அவரும் அவ்வாறே செய்தியை எழுதிக்கொடுக்க அது பத்திரிகையிலும் பிரசுரமாகிவிட்டது.

அடுத்தநாள், அந்த பாதிரியாரே கொழும்பிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு, தான் இறந்தால் எப்படியிருக்கும் என்பதை உங்கள் பத்திரிகை எனக்கு உணர்த்திவிட்டது என்றார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மீண்டும் மாவட்ட அபிவிருத்தி சபைகளை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க, உடனே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு தான் தயார் என்று பதிலளிக்க இப்போது அதுவே பேசு பொருளாகியிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம். பியுமான மைத்திரிபால சிறிசேன, 'நாட்டின் கிராமப்புற மக்களுடன் இணைந்து செயல்படுவதில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். கூடுதல் செலவுகள் இன்றி, அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்புடன் சபைகள் இயங்க முடியும் - என்றும் கூறி அதனை அமைக்குமாறு அழைப்பு விடுத்தார்.

மைத்திரிபாலவுக்கு பதிலளித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு தயார் என்று கூறினார்.

அதாவது மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அமைக்க தயார் என்று ஜனாதிபதி சொன்னாரே தவிர, மாகாண சபைகளை இல்லாமல் செய்துவிட்டு மாவட்ட அபிவிருத்தி சபைகளை அறிமுகப்படுத்தத் தயார் என்று சொல்லவில்லை.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட சில நாட்களிலேயே மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்கி - அதன் தலைவர்களை நியமிக்க விரும்பியிருந்தார். அப்படி மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களை நியமிக்கின்றபோது வடக்கில் கூட்டமைப்பினருக்கே வழங்க அவர் விரும்புகின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் அப்போது இந்த ஊர்க்குருவிக்கு தகவல் தந்திருந்தன.

அப்படியொரு திட்டத்தோடு இருந்தவருக்கு மைத்திரியின் அழைப்பு தனது திட்டத்தை ஒத்ததாக தெரிந்திருக்கலாம். அதனால் அவர் அதற்கு தான் தயார் என்று அறிவித்திருக்கலாமோ என்று இது பற்றி கடுமையான விமர்சனத்தை முன்வைத்த ஓர் ஊடகரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், ஆனால் மைத்திரிதான் தனது பேச்சில், ஜே. ஆர். கொண்டுவந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை என்று விளக்கமாக உரையாற்றியிருந்தாரே என்றார்.

அப்போது, ஜெகதீசன் செய்தி எழுதிய சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. ரணில் முழு பேச்சையும் கேட்டுவிட்டுத்தான் பதிலளித்தாரா என்று அறிய, அன்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்ட எம். பி. ஒருவரிடம் பேசினேன்.

ஜனாதிபதி ரணில் பாராளுமன்ற சபா மண்டபத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் போதுதான், மைத்திரி பேசினார், கதவுவரை சென்றவர் திரும்பி வந்து தனது மைக்கை 'ஒன்' பண்ணிவிட்டு தானும் அதற்கு தயார் என்று கூறிவிட்டு போய்விட்டார் என்றார்.

ஆக, ரணிலைப் பொறுத்தவரை அவர் மனதில் இருந்ததெல்லாம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை பலப்படுத்துவதுதான். தனது திட்டத்துக்கு வேறு ஒருவரும் ஆதரவு தெரிவிக்கின்றபோது அதனை இறுகப்பிடித்துவிடுவோம் என்று நினைத்திருக்கலாம்.

இப்போது அவர் இருபத்திநான்கு மாவட்டங்களுக்கும் தலைவர்களை அதிகாரங்களுடன் நியமிக்கின்றபோது, இந்த செலவீனங்கள் தேவையா என்று யாரும் கேள்வி எழுப்ப முடியாதென்று அவர் கருதியிருக்கலாமோ?

இப்போது ஜனாதிபதி ஊடகப்பிரிவும் ஜனாதிபதி எதனைக் குறிப்பிட்டார் என்று விளக்கமளித்திருக்கின்றது.

மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்றும், நிறைவேற்று தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயல்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது சரி, எமது தமிழ் கட்சிகள் எல்லாம் மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளா என்று கேட்டு பொங்கி எழுந்திருந்ததை கடந்த இரண்டு நாட்களிலும் காணமுடிந்தது.

நமக்குத்தான் மாகாண சபைகளே தேவையில்லையே. சமஷ்டி தீர்வை தவிர வேறு எதையும் தொட்டுப்பார்க்கவும் விரும்பாத நமக்கு மாகாண சபை இருந்தாலென்ன, மாவட்ட சபை இருந்தாலென்ன? சமஷ்டி கிடைக்கும்வரை நாம் ஓயப்போவதில்லைத்தானே.!

**- ஊர்க்குருவி**

# தம்பதியரை கொன்றவருக்கு இரட்டை தூக்குத் தண்டனை!

## நீதிபதி இளஞ்செழியன் வழங்கினார்

வவுனியா, டிசெ. 02

கணவன், மனைவியை கொலை செய்து நகைகளை கொள்ளையிட்ட குற்றவாளிக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

2012 ஜனவரி 19ஆம் திகதி வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்த கந்தையா முத்தையா மற்றும் அவரின் மனைவி பரமேஸ்வரி இருவரும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

சம்பவத்தையடுத்து அவர்களது வீட்டில் தோட்ட வேலைகளுக்கு அமர்த்தப்படும் சாஸ்திரி கும்மாங்குளத்தைச் சேர்ந்த சகோதரர்களான சிங்காரு சத்தியசீலன், சிங்காரு சதீஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் எதிரிகள் இருவருக்கும் எதிராக கொலை, கொள்ளை குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்று வந்தது.

கொல்லப்பட்டவர்களின் மகள், பொலிஸார், நிபுணத்துவ சாட்சிகள் மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சிகள் நிறைவடைந்து நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

"சாட்சிகளின் அடிப்படையில் முதலாவது எதிரி பரமேஸ்வரி என்பரை உயிர் போகும் படி கூரிய ஆயுதத்தால் தாக்கியமை மற்றும் அவரது நகைகளை கொள்ளையிட்டமை மற்றும் முத்தையாவை உயிர் போகும் வரை கூரிய ஆயுதத்தால் தாக்கியமை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவரை குற்றவாளியாக உறுதி செய்து முதலாவது குற்றத்துக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றத்துக்கு இரட்டை தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இரண்டாவது எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாத நிலையில் அவர் விடுதலை செய்யப்படுகிறார்" என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

துக்குத் தண்டனை குற்றவாளியை இலங்கை ஜனாதிபதி தீர்மானிக்கும் நாளில், உயிர் பிரியும் வரை தூக்கிலிட்டு தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மேல் நீதிபதி தீர்ப்பளித்தார். (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் வங்கியியல் கற்கைநெறி!

யாழ்ப்பாணம், டிசெ. 02

வங்கி மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்தத் துறைகளில் இணைய விரும்புவோருக்கும் அடிப்படை அறிவையும், அங்கீகரிக்கபட்ட தராதரத்தையும் வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த டிப்ளோமா கற்கை நெறியின் உத்தியோக பூர்வ அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் ஊடாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் மேற்கொண்டுள்ளது.

கற்கை நெறிக்கான விரிவுரைகளை நடாத்துவதற்காக துறைசார் அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், வங்கித் துறையில் நீண்ட கால அனுபவம் உள்ள வருகைதரு விரிவுரையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறுமட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் அனுபவம் வாய்ந்த தொழில்சார் வல்லுனர்களின் பின்னூட்டல் ஆலோசனைகள் சிபாரிசுகளின் அடிப்படையில் இந்தக் கற்கை நெறிக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, பல்கலைக்கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாற்றுதிறனாளிகள் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 02

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத்தின் தலைவர் க. தர்மசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவர் சி. சிவன்சுதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். இராமநாதன் கல்லூரி ஆசிரியை செல்வி றஞ்சினி விஜயரட்ணம், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கந்தப்பு தங்கராசா, வட மாகாண யாழ். தூரசேவை பேருந்து சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி சஜிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# 6000 இற்கும் மேற்பட்ட மாணவர் எந்த பாடத்திலும் சித்தியில்லை

கொழும்பு, டிசெ. 02

தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள சாதாரண தரப்பரீட்சையை எழுதிய மாணவர்களில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எந்த பாடத்திலும் சித்தி பெறவில்லை என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைவரும் தற்போது யாருடைய உரிமைகள் பற்றி பேசுகின்றனர்?. அதிபர்களின் சம்பள முரண்பாடுகள்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள், கொடுப்பனவுகள் பற்றி பேசுகின்றனர்.

ஆனால், மாணவர்களுக்கு வகுப்புக்களில் சரியான முறையில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றனவா என்பதை பற்றி இங்கு எவரும் பேசவில்லை. 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சாதாரண தரத்தில் சித்தியடையவில்லை.

11 ஆண்டுகள் கல்வி கற்ற பின்னர் அனைத்து பாடங்களிலும் தோல்வி- இது பற்றி எவரும் பேசுவதில்லை.

இவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? பொறுப்புக் கூற எவரும் இல்லை. 11 ஆண்டுகள் பாடசாலையில் கல்வி கற்ற பின்னர், அனைத்து பாடங்களிலும் சித்தியடையவில்லை என்றால், அது பற்றி பேச எவரும் இல்லை.

இவர்கள் யாருடைய உரிமைக்காக பேசுகின்றனர். வயது வந்தவர்களின் உரிமைகள் பற்றி பேசுகின்றனர். மறுபுறம் தமது நிலைப்பாடு ஒன்றுக்கொண்டு முரண்பட்டதாக உள்ளது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
02.12.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரெலோவின் அழைப்பு?

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அரசியல் தீர்வை அடைவதற்கான பொறிமுறை ஒன்றை வகுப்பதற்காக ஒன்று படுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காண்பதற்காக அனைத்து கட்சிகளுடன் பேசவுள்ளாரென அறிவித்திருக்கும் நிலையில்தான் தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் அசைய ஆரம்பித்திருக்கின்றன. உண்மையில் இது ஒரு காலம்கடந்த அழைப்பு. ரெலோ கூட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒன்று. யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அரசியல் தீர்வை அடைவதற்கான பொறிமுறை ஒன்றில்லையென்றும், அதனை வகுப்பதற்கு வருமாறும் ரெலோ அழைப்பு விடுத்திருக்கின்றது. இது தொடர்பில் அரசியல் ஆய்வாளர்களும் அரசியல் அவதானிகளும் அவ்வப்போது கூறிவந்திருக்கின்றனர்.

ஆனால், அதனை ரெலோ உட்பட எந்தவொரு தமிழ் தேசிய கட்சியின் தலைமையும் கருத்தில்கொண்டதில்லை. குறிப்பாக ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தை எவ்வாறு அணுக வேண்டுமென்று போதியளவு பொதுவெளிகளில் விவாதிக்கப்பட்டன. இப்போது ரெலோ கூறுவதை, அப்போது அரசியல் ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால், சம்பந்தன் எதனையுமே கருத்தில்கொள்ளவில்லை. புதிய அரசியல் யாப்பென்னும் மாயமானுக்கு பின்னால் சென்று, ஐந்து வருடங்கள் வீணாகின. அப்போது ஒரு பொறிமுறை ஊடாக விடயங்கள் அணுகப்பட்டிருந்தால், அரசமைப்பில் இருப்பதை முழுமையாக அமுல்படுத்தியிருக்கலாம். அதற்கப்பாலும் சென்றிருக்கலாம். ஆனால், வாய்ப்புகள் அனைத்தும் வீணாகின.

இப்போது மீளவும் ரணில் விக்கிரமசிங்கவுடன் எவ்வாறு பேசுவதென்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. இதற்கானதொரு பொறிமுறையை வகுக்கவேண்டுமென்னும் வாதம் மேலெழுந்திருக்கின்றது. இப்போதாவது ரெலோ இதுபற்றி அழைப்பு விடுத்திருப்பதை வரவேற்கலாம். ஆனால், ரெலோவின் அழைப்பும் அதனை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளும் வெறும் பேச்சளவில் முடிந்துவிடக்கூடாது. சமஷ்டி என்பது பொறிமுறையின் இறுதி இலக்காகவே இருக்க வேண்டும்.

அரசியல் தீர்வுக்கான பொறிமுறை தொடர்பில் ஆராய்கின்றபோது, புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்களுடன் உரையாடி ஓர் ஆவணத்தை தயார் செய்ய வேண்டும். இதற்கான ஆரம்பமாக, முதலில் கட்சிகளுக்கு வெளியிலுள்ளவர்களோடும் ரெலோ ஓர் உரையாடலை செய்யலாம். ரெலோவின் முயற்சியால் ஏற்கனவே இந்தியாவின் தலையீட்டைக் கோரி, கடிதமொன்று அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் அனுப்பும் விடயத்திலும் பலவாறான கருத்துக் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறான குழப்பங்கள் மீளவும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவற்றை தவிர்க்கும் வகையில், முதலில் புத்திஜீவிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோருடன் உரையாடி, ஓர் ஆரம்ப வரைவை தயார்செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னரே கட்சிகளை இணைத்து அரசியல் தீர்வுக்கான பொறிமுறையை வடிவமைக்க வேண்டும்.

இந்தப் பொறிமுறை வெறும் கற்பனாவாதங்களை முன்னிலைப் படுத்துவதாக இருக்கக்கூடாது. உடனடி, இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் விடயங்களை கையாளுவதாக இருக்க வேண்டும். முதலில் மாகாண சபை தேர்தல் மற்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் உடனடிக் கோரிக்கையாக இருக்க வேண்டும். பின்னர் கால மாற்றங்களில் அடுத்த கட்டத்தை நகர்த்த வேண்டும். அவ்வாறில்லாது, எடுத்த எடுப்பிலேயே, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தினால், அது ரணில் விக்கிரமசிங்கவுக்கே சாதகமாகும். அனைத்து தரப்புக்களும் உடன்பட்டால் மட்டுமே தன்னால் விடயங்களை முன்னெடுக்க முடியுமென்று கூறிவிட்டு ரணில் இலகுவாக இந்த முன்னெடுப்பிலிருந்து வெளியேறிவிடலாம். ஏனெனில், நமது சமஷ்டி கோரிக்கைக்கு வெளியாரின் ஆதரவு சிறியளவில்கூட இல்லை. இவற்றை கருத்தில் கொண்டுதான், தமிழ் கட்சிகள் செயல்பட வேண்டும். இந்த பின்புலத்தில் ரெலோவின் அழைப்பு வரவேற்கத்தக்கது. ஆனால், இதனை யதார்த்தமான சிந்தனையுடனும் நேர்த்தியாகவும் முன்னெடுப்பதில்தான் அடுத்தகட்டம் தங்கியிருக்கின்றது.

# ஓர் ஆசிரியர் மட்டும் பாடசாலைக்கு வந்ததால் ஆத்திரமடைந்த பெற்றோர்

*முல்லைத்தீவு, டிசெ. 02*

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வியைத்தின் கீழ் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்து விநாயகர் தமிழ் வித்தியாலயத்துக்கு நேற்று காலை பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர்கள், அவர்களை மீண்டும் வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

குறித்த பாடசாலைக்கு அதிபர் இல்லாத நிலை நீண்ட காலமாக காணப்படும் நிலையில், நேற்று பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் மட்டும் வருகை தந்துள்ளார்.

தரம் 5 வரையான பாடசாலையில் ஓர்ஆசிரியர் எவ்வாறு அனைத்து மாணவர்களுக்கும் கல்வியைக் கற்றுக்கொடுக்கமுடியும் என்ற கேள்வி பெற்றோர்கள் மத்தியில் எழுந்ததை அடுத்து பெற்றோர்கள் மாணவர்களை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

அதேவேளை, பாடசாலைக்கு சரியான அதிபரை நியமிக்கும் வரை தமது பிள்ளைகளை பாடசாலை அனுப்பப்போவதில்லை என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

72 மாணவர்களை கொண்ட இந்த ஆரம்ப பாடசாலையில் 6 ஆசிரியர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பாடசாலையில் கடமையில் இருந்த அதிபர் கடந்த 26.05.2022 அன்று விபத்து ஒன்றின்போது உயிரிழந்ததை தொடர்ந்து இதுவரை எந்த அதிபரும் பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லை.

தரம் 5 புலமை பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களும் இந்த பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்கள். கோட்டக்கல்வி பணிமனை, வலயக்கல்வி பணிமனை என்பவற்றுக்கு பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். (அ)

# பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையில் போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்துரை

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளுக்கான தற்சார்பு பொருளாதாரம் தொடர்பாகவும், போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பாகவும் கருத்தரங்கு ஒன்று நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தெங்கு அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் 200 தென்னங்கன்றுகளும் மரக்கறி விதைப் பொதிகளும் மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. இளவாலை சர்வ மத ஆன்மீக அறக்கட்டளையின் போசகர் அருட்தந்தை சி.ஜி. ஜெயக்குமார் அடிகள், தெங்கு அபிவிருத்திச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.வைகுந்தன், ஓய்வு நிலை அதிபர் ஸ்ரீ காந்தன், தமிழர் சக்தி அமைப்பின் பிரதானி ரவிமயூரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் இரு மாணவிகளுக்கு



கல்விக்கான உதவியாக தலா ரூபா 10,000 வழங்கப்பட்டதுடன் உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தினரால் திருக்குறள் நூல்களும் பாடசாலை நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியர் அமரர் சோமசேகரசுந்தரம் நினைவாக அவரது மாணவர் ஒருவர் இதற்கான நிதியுதவிகளை வழங்கினார். (அ)

# வருமான வரி கணக்கை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நீடிப்பு


*கொழும்பு, டிசெ. 02*

வருமான வரி கணக்கை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய அவர், குறித்த காலக்கெடு நவம்பர் 30ஆம் திகதியிலிருந்து மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். அந்த காலக்கட்டத்தில் அபராதம் விதிக் கப்படமாட்டாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்ட மூலத் தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தனிநபர்களுக்கான புதிய வருமான வரி விதிகள் டிசெம்பர் மாதம் முதல் அமுலுக்கு வருமென முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 02 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 16
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி




**மேடம்**

பண வரவில் இருந்த தடைகள் விலகும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம்.பணம் பல வழிகளிலும் வரும். அறிமுகம் இல்லாதவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். கவனம் தேவை.

**இடபம்**

முயற்சிகள் பலன் அளிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும்.வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள்.

**மிதுனம்**

திறமை வெளிப்படும். முயற்சிகள் வெற்றியாகும். நினைத்ததை இன்று செய்து முடிப்பீர்கள். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். நிதிநிலை உயரும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும்.

**கடகம்**

கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.நினைத்த செயல்களை நிறைவேற்ற முடியாமல் போகும். குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். பிரச்னைகள் உருவாகலாம்.

**சிம்மம்**

முயற்சிகள் நிறைவேறும். உங்கள் எண்ணம் நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். தம்பதி ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவீர்கள்.

**கன்னி**

தடைகள் அகலும். மற்றவரின் மனதைப் புரிந்து செயல்படுவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். தடைகளைக் கண்டறிந்து விலக்குவீர்கள். தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவீர்கள்.

**துலாம்**

எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். உறவுகளால் சில சங்கடங்களை அடைவீர்கள். குடும்பத்திற்குள் கருத்து பேதம் உண்டாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். பணியிடத்தில் செல்வாக்கு உயரும்.

**விருட்சிகம்**

மகிழ்ச்சி அதிகரிக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகி வருமானம் அதிகரிக்கும். கடன்களை அடைப்பீர்கள். பணியிடத்தில் உங்களுக்கு சாதகமான நிலை உண்டாகும்.

**தனுசு**

நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கையாள்வீர்கள்.

**மகரம்**

வருமானம் உயரும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். புதிய வேலைக்காக முயற்சித்து வந்தவர்களுக்கு எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.

**கும்பம்**

புதிய பாதையில் பயணிப்பீர்கள். பிரச்னைகளை சரி செய்வீர்கள். உங்கள் விருப்பப்படி செயல்பட்டு அதில் வெற்றி காண்பீர்கள்.பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பண வரவு உண்டாகும்.

**மீனம்**

மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். உங்கள் தேவைகள் நிறைவேறும். குடும்பத்தினரால் வீண் செலவுகள் அதிகரிக்கும். திடீர் பயணமும் அலைச்சலும் ஏற்படும்.

# தமிழர்கள் நிம்மதியாக வாழ அனைத்தையும் செய்வோம்!

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை, டிசெ. 02

தமிழர்கள் அனைவரும் நிம்மதியுடன் வாழ தி. மு. க. அரசு இயன்ற அனைத்தையும் செய்யும் என்று தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கட்சியினருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைக்கும் ஆட்சியாக இருப்பதுதான் திராவிட மொடல் ஆட்சி. ஒவ்வொரு தமிழரும் நிம்மதியுடன் வாழ தி. மு. க. அரசு இயன்ற அனைத்தையும் செய்யும் என்ற உறுதியுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன்.

திமுக அரசுக்கு எதிராக, சட்டம் - ஒழுங்கு பிரச்னை உள்ளிட்ட சங்கடங்களையும் குழப்பங்களையும் உருவாக்க, அரசியல் எதிரிகள் சதித்திட்டம் தீட்டி, வதந்திகளை பரப்ப நினைக்கின்றனர். நல்ல அரசைக் கெடுக்க நினைப்போரின் நயவஞ்சக எண்ணத்தை நசுக்கி, முனை மழுங்க செய்யும் பணி தி. மு. க. தொண்டர்களுக்கு உண்டு. திட்டமிட்டுப் பரப்பப்படும் பொய்களையும், வதந்திகளையும் புள்ளி விவரங்கள் மூலம் அறுத்தெறியவேண்டும்.

ஆரிய - திராவிட பண்பாட்டுப் போரில், திமுக தொடர்ந்து ஜனநாயக யுத்தத்தை நடத்தி வருகிறது. இனம், மொழி, மாநில உரிமைகள் மீதும் தொடுக்கப்பட்டுள்ள போரை நேர்மையாக எதிர்கொண்டு வருகிறோம். அதில் மகத்தான வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

தமிழகத்தையும், இந்தியா முழுவதற்குமான ஜனநாயகத்தையும் பாதுகாக்க களம் காண வேண்டிய கடமை வீரர்களாக தி. மு. கவினர் திகழ வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# ஆளுநர் மீது பொய் பழிபோடும் தி. மு. க. தலைகுனிய வேண்டும்!

## அண்ணாமலை சொல்கிறார்



சென்னை, டிசெ. 02

திறனற்ற தன்மையை மறைக்க பொய்களைப் பரப்பி, ஆளுநர் மேல் பழியை போட்டுக் கொண்டிருந்த தி. மு. கவினர் தலை குனிய வேண்டும் என தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

ஒன்லைன் தடை சட்டத் தீர்மானம் பரிசோதனையில் இருப்பதாக ஆளுநர் ரவி தெரிவித்தார். அதன்மீது விரைவில் நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் ரவி உறுதி அளித்துள்ளார். அந்த சட்டம் குறித்து சில சந்தேகங்கள் உள்ளன. அதனை தெளிவு படுத்திக் கொண்டு, ஒப்புதல் தருவதாக கூறினார்.

இந்நிலையில், இது குறித்து தமிழக பா. ஜ. க., தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இன்று (நேற்று) பத்திரிகையாளர்களை சந்தித்த திறனற்ற திமுக அரசின் சட்டத்துறை அமைச்சரான ரகுபதி ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய கொண்டு வரப்பட்ட அவசர சட்டத்திற்கு அரசாணை பிறப்பிக்கப்படவில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

அரசாணை பிறப்பிக்காமல் அவசர சட்டம் இயற்றி என்ன பயன் என்று தமிழக பா. ஜ. க, முன் வைத்த கேள்வியை அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம். தங்கள் திறனற்ற தன்மையை மறைக்க பொய்களைப் பரப்பி ஆளுநர் மேல் பழியை போட்டுக் கொண்டிருந்த தி. மு. கவினர் தலை குனிய வேண்டும் - என்றார்.

# அ. தி. மு. கவை கைப்பற்ற பன்னீர்செல்வம் தீவிரம்!

சென்னை, டிசெ. 02

அ.தி.மு.கவில் எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ. பன்னீர்செல்வத்துக்கும் இடையே மோதல் முற்றியதை தொடர்ந்து கடந்த ஜூலை மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவில் எடப்பாடி பழனிசாமி இடைக் கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பொதுக்குழு கூட்டம் செல்லாது என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பில் மேன்முறையீடு செய்தார்.

இதனை விசாரித்த நீதிபதிகள் அ.தி.மு.க. சட்ட விதிகளுக்கு உட்பட்டே பொதுக்குழு கூட்டப்பட்டு உள்ளது என்றும் எனவே பொதுக்குழு செல்லும் என்றும் தீர்ப்பளித்தனர்.

இதனை எதிர்த்து பன்னீர்செல்வம் உச்சநீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு அவருக்கு சாதகமாக உள்ளதாக நம்பப்படுகின்றது.

தீர்ப்பு அவருக்கு சாதகமாக வரும் பட்சத்தில் அதனை வைத்து அ.தி.மு.க.வை கைப்பற்றி விடலாம் என்று பன்னீர்செல்வம் கணக்கு போட்டு வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

# ஜல்லிக்கட்டு போட்டிக்கு நீதிபதிகளுக்கு அழைப்பு

## தமிழக அரசு அனுப்பியது



புதுடில்லி, டிசெ. 02

பொங்கல் பண்டிகையொட்டி அடுத்த மாதம் (ஜனவரி) மதுரை அலங்காநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது.

இந்த ஜல்லிக்கட்டு அனுமதிக்கு எதிராக பீட்டா அமைப்பு உச்ச நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கு விசாரணை உச்சநீதிமன்றில் நடந்து வருகிறது. இதற்கிடையில் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கு விசாரணை முடிந்த பிறகு ஜல்லிக்கட்டு போட்டியை காண வருமாறு உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு தமிழக அரசு வழக்கறிஞர் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஜூன் 9 கோட்டாவை கொல்ல பாதுகாப்பு அதிகாரிகளே சதி!

## அனைத்தையும் அம்பலப்படுத்துகிறார் விமல்



கொழும்பு, டிசெ. 02

**"ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கோட்டாபய ராஜபக்ஷவைக் கொல்வதற்கான ஒரு சதித்திட்டம் இருந்தது உண்மை. பாதுகாப்பு அதிகாரிகளே அந்தத் திட்டத்தை வகுத்திருந்தார்கள். ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதியும் தங்கி நின்ற கோட்டாபய, தற்செயலாக அன்று காலை ரி.வி ரிமோட்டை எடுத்து ரிவியைப் போட்டு செய்தியைப் பார்த்திருக்காவிட்டால் பின்வாசலால் தப்பியோடியிருக்க மாட்டார். அன்று போராட்டக்காரர்கள் அவரை அடித்துப் படுகொலை செய்திருப்பார்கள்."**

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும்போது வெற்றிகரமாகச் செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் தோல்வியடைந்தது எப்படி? கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து தப்பியோடிய அன்று நடந்தது என்ன? அவரைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டதா?அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது எப்படி? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை வழங்கிய போதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டாபய தோல்வியடையப் பல காரணங்கள் உண்டு. ஒன்று ராஜபக்ஷ குடும்பம். மற்றது அவரின் சகாக்கள். அதிலும் பஸில் போன்றவர்கள் கோட்டாபயவை பிழையாக வழிநடத்தியமையே தோல்விக்குப் பிரதான காரணம்.

அதேவேளை, ஜனாதிபதி செயலாளராக இருந்த பீ.பீ. ஜயசுந்தரவின் தாளத்துக்குக் கோட்டாபய ஆடியமையும் அவரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

அடுத்தது அமெரிக்காவும் அவரின் தோல்விக்கு ஒரு காரணம். ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்றதன் பின் அமெரிக்காவில் போய் பிள்ளைகளுடன், பேரப்பிள்ளைகளுடன் கடைசிக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று விரும்பினார் கோட்டாபய. அதனால் அவர் அமெரிக்காவை அதிகம் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.

அமெரிக்கத் தூதுவருடன் நல்ல உறவைப் பேணி வந்தார் கோட்டாபய. ஆனால், அமெரிக்கா டபிள் கேம் ஆடியது. ஒருபுறம் கோட்டாபயவுடன் அமெரிக்கத் தூதுவர் இருப்பது போல் காட்டிக்கொண்டார். மறுபுறம், அவரைப் பதவி இறக்குவதற்காக வேலை செய்தார்.

கடந்த ஜூன் 9ஆம் திகதி காலை ஜனாதிபதி மாளிகையிலிருந்து கோட்டாபய தப்பியோடிய அன்று அவரை ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்தே கொல்வதற்கான ஒரு சதித்திட்டம் இருந்தது உண்மை.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது உடன் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் பாதுகாப்பு ஏற்பாடு பற்றிக் கேட்கின்றார் கோட்டாபய. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கோட்டாபய விடம் அவர்கள் கூறுகின்றார்கள்.

அப்போது அருகில் இருந்த ரிவி ரிமோட்டை எடுத்து ரிவியைப் போடுகின்றார் கோட்டாபய. அந்தவேளை போராட்டக்காரர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வருவது ஒரு தனியார் சனலில் காட்டப்படுகின்றது. ஆனால், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் பொய் கூறினார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும்தான் கோட்டாபய பின்வாசலால் தப்பியோடினார். இல்லாவிட்டால் அவர் சிக்கி இருப்பார். போராட்டக்காரர்களால் அவர் அடித்துக் கொல்லப்பட்டிருப்பார். அவரைக் கொல்வதற்காக வகுக்கப்பட்ட திட்டம்தான் அது.

அவர் அந்தச் செய்தியை ரி.வியில் தற்செயலாகப் பார்த்ததால்தான் அன்று உயிர் தப்பினார் - என்றார். (அ)

## எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 02

விவசாயப் பகுதிகளை அண்மித்த பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.

மழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக நெற்செய்கையில் ஈடுபடும் போது சிறுநீரக நோயாளர்கள் மற்றும் கல்லீரலுடன் தொடர்புடைய நோய் தொற்றுக்குள்ளானவர்கள் இந்த விடயம் தொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வயல்களை அண்மித்த பகுதிகளில் துப்புரவு பணிகளில் ஈடுபடும்போது அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# ஏ.எல். முடியும் வரை மின்வெட்டை நிறுத்துவது தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 02

உயர்தரப் பரீட்சை முடியும் வரை உத்தேச மின்சாரக் கட்டண உயர்வை நிறுத்துவது மற்றும் மின்வெட்டை நிறுத்துவது குறித்து ஆராயவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை ஜனவரி 23ஆம் திகதி முதல் பெப்ரவரி நடுப்பகுதி வரை நடத்தப்படவுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கூறினார்.

மீண்டும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கநேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்கு முகம்கொடுக்கும் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் இந்த விடயத்தை முன்வைத்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# இரண்டாவது நாளாக நேற்று கல்லுண்டாயில் போராட்டம்!





யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ். மாநகர சபை தமது சபை எல்லைக்குள் கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்த வேண்டும் எனக் கோரி வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி மக்களுடன் இணைந்து இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாநகர சபை, வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் கல்லுண்டாய் பிரதேசத்தில் கழிவுகளைக் கொட்டி வருகிறது. அதனால் அந்த பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், அப்பகுதி மக்களுடன் இணைந்து மாநகர சபை தமது எல்லைக்குள் கழிவுகளை கொட்டக்கூடாது என கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## மலேசியாவின் புதிய பிரதமருக்கு ரணில் தொலைபேசியில் வாழ்த்து

கொழும்பு, டிசெ. 02

மலேசியாவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட அன்வர் இப்ராஹிமுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேற்று வியாழக்கிழமை காலை மலேசிய பிரதமரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதே தமது விருப்பம் எனவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

மலேசியாவின் 10ஆவது பிரதமராக அன்வர் இப்ராஹிம் கடந்த 24ஆம் திகதி பதவியேற்றார். (அ)

## பண்டிகை காலத்தில் மரக்கறி விலைகள் உச்சத்தை அடையும்

கொழும்பு, டிசெ. 02

எதிர்வரும் பண்டிகை காலத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் உச்சத்தை அடையும் என்று அனைத்து பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தற்போது தேவைக்கு ஏற்ப சந்தைப்படுத்துவதற்கு மரக்கறி உற்பத்தி போதுமானதாக இல்லை எனவும் நாட்டின் விவசாயத் துறையை ஆட்சியாளர்கள் நாசமாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது உள்நாட்டு உருளைக்கிழங்கு கிலோ ஒன்று 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்ற நிலையில், அதற்கு ஏற்ப கரட், போஞ்சி உள்ளிட்ட மரக்கறிகளும் கடுமையாக விலையுயர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

# பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க மத்திய வங்கி ஆளுநரே சரியான ஆள்!

## இலங்கையர்கள் நம்புகிறார்களாம்

கொழும்பு, டிசெ. 02

பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு இலங்கையர்களின் அதிக நம்பிக்கையைப் பெற்றவர் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க என்றும் அவர் மீது 56.6 வீத நம்பிக்கை இருப்பதாகவும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் வெளியிட்டுள்ள சமீபத்திய ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இரண்டாவது இடத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிடித்துள்ளார். அவர் மீது 44.5 சதவீதமானவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

மேலும், சந்தர்ப்பம் கிடைத்தால், 56.8 வீதமான இலங்கையர்கள் வேறு நாட்டுக்கு இடம்பெயர விரும்புவதாகவும் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 18-29 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 18-29 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையர்களில் 77.2 வீதமானவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் வேறு நாட்டுக்கு இடம் பெயரத் தயாராக இருக்கிறார்கள். அதேவேளை 30 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களில் 45.4 வீதமானவர்கள் வாய்ப்பு கிடைத்தால் வேறு நாட்டுக்கு இடம்பெயரத் தயாராக உள்ளனர்.

மேலும், இந்த அறிக்கையின்படி, 60.5 சதவீதமான இலங்கையர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான அரசாங்கத்தின் முடிவை அங்கீகரித்துள்ளனர், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 18-29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்.

இந்த அறிக்கையின் படி இலங்கையில் 79.1 வீதமானவர்கள் ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த பொருளாதார நிலைமையை விட தற்போதைய பொருளாதார நிலைமை மோசமாக உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.




இந்தக் கணக்கெடுப்புக்காக 1000 மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஒக்டோபர் 21 முதல் 31 வரை இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. (அ)

# கடலட்டைப் பண்ணையால் பாதிப்பு; அனலைதீவு மீனவர்கள் போராட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 02

அனலைதீவு-பருத்தித்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் நேற்று திடீரென தொழில் நடவடிக்கையை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை கடலட்டைப் பண்ணைகளை அகற்றும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் அனலைதீவு 3 ஆம் வட்டார கடற்றொழிலாளர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

நேற்று முதல் கடற்றொழில் செயற்பாடுகளைப் புறக்கணித்துள்ள கடற்றொழிலாளர்கள், பருத்தித்தீவு கடல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளையும் காண்பித்தனர்.

இதன்போது புதிதாக கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுகிறது என்றும் குற்றம்சாட்டினர். (அ)

# தலையில் காயங்களுடன் இறந்த நிலையில் முதலை

கொழும்பு, டிசெ. 02

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போகம ஆற்றில் தலையில் பலத்த அடி காயங்களுடன் இறந்த நிலையில் மிதந்த முதலையொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறந்த முதலை ஐந்து வயதுடையதாக இருக்கலாம் என தெரிவித்த வனஜீவராசி அதிகாரிகள், ஏழு அடி நீளம் கொண்ட முதலை எனவும் கூறினர்.

குறித்த முதலை இரண்டு நாட்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் எனவும் வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அக்போகம ஆற்றில் தான் இந்த முதலை நீண்ட காலமாக இருந்ததாகவும், சில நாட்களாக இம் முதலையை காணவில்லை எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் 7 பேருக்கு மலேரியா தொற்று!

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடம் 7 பேர் மலேரியா தொற்றார்களாக இனங்காடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

குறித்த 7 பேரும் மலேரியா தொற்றுள்ள வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்கள் எனவும் அவர்களுக்குரிய சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# இலங்கைக்கு ஆதரவளிக்க தொடர்ந்து நாணய நிதியத்தை ஊக்குவிக்கும் சீனா

கொழும்பு, டிசெ. 02

தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இலங்கைக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச நிதி அமைப்புகளைத் தொடர்ந்து ஊக்குவித்ததாக சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்குதாரர் என்ற வகையில், நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களை உடனடியாக இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு சீனா ஊக்குவித்து வருவதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கடனை மறுசீரமைக்கும் முயற்சியில், இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களின் கூட்டங்களிலும் சீனா தீவிரமாக பங்கேற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் சீனாவின் நிதி நிறுவனங்கள் தாமதமின்றி நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியை தொடர்பு கொண்டதாகவும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு வங்கிகளின் பணிக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்து வருவதாகவும், இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்வதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம், சீனா இலங்கையின் உண்மையான நண்பன் அல்ல என தெரிவித்துள்ளார். (அ)

# ரயிலுடன் மோதுண்டது ஓட்டோ; ரஷ்யப் பெண் உட்பட 2 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 02

உனவட்டுன மஹரம்ப ரயில் கடவையில் ரஜரட்டை மெனிகே ரயிலுடன் ஓட்டோ மோதியதில் ரஷ்யப் பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக ஹபரதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பெலியத்தையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ரஜரட்டை மெனிகே ரயிலுடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானது. உயிரிழந்தவர்களில் ஓட்டோச் சாரதியும் அடங்குவார். (அ)

# பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு: சட்டத்தரணி உட்பட மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 02

பாணந்துறை, சில்வன் ஒழுங்கையில் நேற்றிரவு(30) நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சட்டத்தரணி ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து, சந்தேகநபரான சட்டத்தரணியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்துடனான கைத்துப்பாக்கி மற்றும் சட்டத்தரணியின் வாகனம் என்பன



பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. துப்பாக்கிப் பிரயோகத்தின்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (அ)

## பண்டிகை காலத்திலும் நாளாந்தம் மின்வெட்டு!

கொழும்பு, டிசெ. 02

பண்டிகைக் காலத்திலும் நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்த நேரிடும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாளாந்தம் 02 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

நீர் மின்சார உற்பத்தி மற்றும் நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக தொடர்ந்தும் மின்சார உற்பத்தியில் சிக்கல் காணப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக தெரிவித்தார். (அ)

## வவுனியாவில் கடும் பனி



வவுனியா, டிசெ. 02

வவுனியாவில் நேற்று காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 8.00 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக வேலைக்கு செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏ-9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 8 மணிவரை ஒளியைப் பாய்ச்சியபடி சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ)

## நீதிபதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 02

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் 56 மேலதிக நீதவான்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் இரண்டாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் உரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கார்களை பாதுகாப்பாக பயன்படுத்தி மீண்டும் அமைச்சுக்கு வழங்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய சுற்றறிக்கையை வெளியிட்டு அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கும் நீதிச்சேவை ஆணைக்குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மொட்டிலிருந்து சென்றவர்கள் மீண்டும் திரும்பி வரவேண்டும்

### கோருகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி எதிர்க்கட்சிக்குச் சென்றவர்கள் மீண்டும் கட்சிக்கு திரும்ப வேண்டும் என அந்த கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர்பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிலர் ஆரம்பத்தில் இருந்தே கட்சியில் இருந்து விலக வேண்டும் என தீர்மானித்து இருந்தவர்கள். ஏனையோர் அப்படியான தீர்மானத்தில் இருக்கவில்லை. வேறு கட்சிக்கு சென்று அமைச்சுப் பதவிகளை பெறவேண்டும் என எதிர்பார்ப்பு சிலருக்கு இருக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவை எடுத்துக்கொண்டால், நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்ததுடன் எமது கட்சியின் ஊடாகவே பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

அவை அப்படித்தான். கட்சியில் இருந்து சென்றவர்கள் மீண்டும் சிந்தித்து பார்க்குமாறு நான் கேட்கிறேன். சென்றவர்கள் அனைவரும் மிகவும் வசதியான இடம் மொட்டுக்கட்சியே எனவும் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை விமல் வீரவன்ஸவுடன் மீண்டும் பயணம் ஒன்றை ஆரம்பிக்க நான் ஆசையுடன் இருக்கின்றேன். நாட்டுக்காக இந்த இணைப்பு நடக்கவேண்டும். எந்த தியாகத்தையும் செய்ய நான் தயாராக இருக்கின்றேன்- என்றார். (அ)

## பெண் எம். பிக்கள் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை வேண்டும்!

### சபையில் வலியுறுத்தினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 02

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொனமோர் அரசியலமைப்பின் கீழ் 1931 ஆம் ஆண்டு இலங்கை அரச சபைக்கு முதல் பெண் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார்.

1931 ஆம் ஆண்டு அரச சபையில் பெண் பிரதிநிதித்துவம் 2 வீதமாக இருந் ததாகவும், 91 வருடங்களின் பின்னரும் 2022 இல் 5 வீதமாக பெண் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது.

சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களாக இருந்தாலும் தற்போது 12 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே பாராளுமன்றத்தில் இருப்பது துரதிஷ்டவசமானது. பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு புதிய சட்டங்களை உருவாக்குமாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர் குழுவிடம் கோரிக்கை விடுக்கிறேன்.

பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பட்டியல் முறையொன்றை அறிமுகப்படுத்த முடியும்- என்றார். (அ)

## திருமறைக் கலாமன்ற தினத்தை முன்னிட்டு நாளை பல நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 02

கலைப்பணியில் 57 ஆண்டுகளை நிறைவு செய்து 58 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் தினம் நாளை சனிக்கிழமை சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 7.00 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞான சுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மு.ப.10.00 மணிக்கு இல.238 , பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும். இல. 286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளுக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண பெட்டக நிழலுரு கலைக்கூட இயக்குநர் மா.அருள்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள்,கலைஞர் கௌரவிப்பு என்பனவும், சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'ஏகலைவன்' தென்கோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (அ)

## மைத்திரிபால கூட்டிய கூட்டத்தில் பங்கேற்காத கூட்டணிக் கட்சிகள்!

கொழும்பு, டிசெ. 02

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் அதன் கூட்டணிக் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை.

நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நான்கு கூட்டணிக் கட்சிகளின் செயலாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தனர்.

தாமோ, தமது கட்சியின் சார்பில் நிறைவேற்றுக்குழுவில் அங்கம் வகிப்போரோ கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார்கள் என அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளனர்.

தேச விடுதலை மக்கள் கட்சியின் செயலாளர் டி. கலன்சூரிய, மக்கள் ஐக்கிய முன்னணி செயலாளர் திஸ்ஸ ஜயவர்தன யாப்பா, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஏ.எம். எம்.அதாவுல்லா ஆகியோரே மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாப்பை ஆராய்ந்தபோது, முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல், முன்னணியின் தலைவர் நிறைவுற்றுக்குழுக் கூட்டத்தை கூட்டுவது சட்டவிரோதமானது என அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளனர்.

யாப்புக்கு எதிரான கூட்டத்தை நடத்துவதால் பல சட்ட ரீதியான சிக்கல்கள் ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக்கட்சிகள் என்ற வகையில் தாமும் நீதிமன்றத்தில் பிரதிவாதிகளாக முன்னிலையாக நேரிடும் என்பதால், கூட்டத்தை இரத்துச் செய்யுமாறு கடிதத்தில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)



# 51 ஆண்டுகளுக்கு முன் கடத்தப்பட்ட பெண்ணை குடும்பத்துடன் சேர்த்த அறிவியல்!

பெர்ன்ட் டெபூஸ்மன் ஜூனியர்

குழந்தையாக இருந்தபோது கடத்தப்பட்ட பெண் 51 ஆண்டுகளுக்குப் பிறகு தனது குடும்பத்துடன் இணைந்துள்ளார். டிஎன்ஏ பரிசோதனை மூலம் இது சாத்தியமாகி இருக்கிறது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த மெலிசா ஹைஸ்மித்துக்கு இப்போது வயது 53. 1971-ஆம் ஆண்டு அவர் 22 மாத குழந்தையாக இருந்தபோது போர்ட் வொர்த் நகரில் உள்ள அவரது வீட்டில் இருந்து குழந்தை பராமரிப்பாளரால் கடத்தப்பட்டார்.

பல ஆண்டுகளாக குடும்பத்தினர் எங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை. கடைசியாக ஓர் இணையதள நிறுவனத்துக்கு வந்த டிஎன்ஏ மாதிரிகள் பொருந்திப் போனபோதுதான் அவர் குடும்பத்துடன் சேர முடிந்தது. இந்த இணையதளம் டிஎன்ஏ பரிசோதனைகளைச் செய்வதுடன் மரபு ரீதியிலான குடும்ப வரைபடத்தையும் உருவாக்குவதற்கு உதவுகிறது.



நீண்ட காலமாக 'மெலனி" என்று அறியப்பட்டு வந்த, மெலிசா ஹைஸ் மித் இப்போது தனது பழைய பெயரையே வைத்துக் கொள்ள திட்டமிட் டுள்ளார்.

1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹைஸ்மித்தின் கடத்தல் நடந்தது. அவரது தாயார் ஆல்டா அப்பா டெங்கோ, உள்ளூர் செய்தித் தாள் விளம்பரம் மூலமாக குழந்தையை பராமரிப்பதற்கு ஒரு பெண்ணை நியமித்தார்.

தனது வீட்டில் வைத்து மெலிசாவை பராமரிப்பதாக கூறிய அந்தப் பெண்தான் அவரைக் கடத்தியிருக் கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.

குழந்தையை வீட்டுக்குக் கொண்டு சென்ற அந்தப் பெண் அத்துடன் மாயமா னார். மெலிசாவின் குடும்பம் அவரைத் தேடும் பணியைத் தொடங்கியது. பல பத்தாண்டுகள் கடந்தும் தேடுவதை மாத்திரம் விட்டுவிடவில்லை. காவல் துறையும், மத்திய அரசின் அதிகாரி களும் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

கடந்த செப்டம்பரில் மெலிசா, தெற்கு கரோலினா மாநிலத்தில் இருப்பதாக அவரது குடும்பத்துக்கு ஒரு துப்புக் கிடைத்தது.

ஏற்கெனவே 50 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஹைஸ்மித்துக்கு தெரியவே தெரியாது. குடும்பத்தினர் அவரை பேஸ்புக் மூலம் முதலில் தொடர்பு கொண்டபோது, அது ஏதோ மோசடி என்றுதான் அவர் கருதினார்.

கடந்த நவம்பர் 6-ஆம் திகதிதான் அந்த மர்ம முடிச்சு அவிழ்ந்தது. 23யுனெஆந என்ற இணையதளத்தில் இருந்த டிஎன்ஏ பரிசோதனை முடிவுகள் ஹைஸ்மித்தின் குழந்தைகளுக்கும் மெலிசா ஹைஸ்மித்தை தேடிக்கொண்டிருந்த குடும்பத்தினருக்கும் மரபு ரீதியான தொடர்பு இருப்பதை உறுதி செய்தது. மரபணு நிபுணர் ஒருவர் இந்த மர்மத்தை விலக்குவதற்கு உதவி செய்திருக்கிறார்.

"எங்கள் குழந்தையைக் கண்டுபிடித்தது டிஎன்ஏவால் மட்டுமே சாத்தியமாகி இருக்கிறது. காவல்துறை, எப்பிஐ போன்றவற்றால் அல்ல. குடும்பத்தின் தனிப்பட்ட புலனாய்வுகளும்கூட உதவவில்லை " என்று மெலனியின் குடும்பத்தினர் தங்களது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளனர்.

கூடுதலாக அதிகாரப்பூர்வமான, சட்டப்படியான டிஎன்ஏ பரிசோதனை செய்திருப்பதாகவும், முடிவுகளுக்காகக் காத்திருப்பதாகவும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹைஸ்மித்தும் அவரது குடும்பத்தினரும் நவம்பர் 26-ஆம் திகதி நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டார்கள்.

'இது மிகப்பெரியது, அதே நேரத்தில் அற்புதமானது" என்று அமெரிக்க தொலைக்கட்சி நிறுவனமான சிபிஎஸ்ஸிடம் ஹைஸ் மித் கூறினார்.

ஹைஸ்மித்தை பெற்றெடுத்த தாயான அப்பா டெங்கோ இவ்வளவு காலத்துக்குப் பிறகு குடும்பம் ஒன்று சேர்ந்திருப்பதை தம்மால் நம்ப முடியவில்லை என்று கூறியிருக்கிறார்.

'நான் அவளை மீண்டும் பார்க்க மாட்டேன் என்றுதான் நினைத்திருந்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஹைஸ்மித் குழந்தையாக இருந்தபோது அவரை யார் கடத்திச் சென்றார் என்ற எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் தன்னை இத்தனை ஆண்டுகளாக வளர்த்தவருக்கு தான் கடத்தப்பட்டவள் என்பது தெரியும் என்று ஹைஸ்மித் தெரிவித்தார்.

நீண்ட காலமாகிவிட்டதால் கடத்தல் தொடர்பான சட்டவரம்புகள் காலாவதியாகி விட்டாலும் இந்த விவகாரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதை தொடர்ந்து விசாரிக்கப் போவதாக போர்ட் வொர்த் காவல்துறை கூறியிருக்கிறது.

இழந்துவிட்ட காலத்தை மீட்கும் வகையிலான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும், ஒருவருக்கொருவர் அறிந்து கொண்டு வருவதாகவும் குடும்பத்தினர் கூறுகிறார்கள்.

உதாரணத்துக்கு ஹைஸ்மித் தனது திருமணத்தை இப்போதைய கணவருடன் மீண்டும் நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அப்போது அவருடைய தந்தை மணப்பெண்ணை அழைத்து வரும் சடங்கைச் செய்யலாம் என்றும் ஹைஸ்மித்தின் சகோதரிகள் வாஷிங்டன் போஸ்ட்டிடம் கூறியுள்ளார்கள்.

'இப்போது என் இதயம் நிரம்பியுள்ளது, உணர்ச்சிகளால் பொங்குகிறது. நான் மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று சிபிஎஸ்சிடம் ஹைஸ்மித் கூறினார்.

(பிபிசி)

**பல ஆண்டுகளாக குடும்பத்தினர் எங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை. கடைசியாக ஓர் இணையதள நிறுவனத்துக்கு வந்த டிஎன்ஏ மாதிரிகள் பொருந்திப் போனபோதுதான் அவர் குடும்பத்துடன் சேர முடிந்தது. இந்த இணையதளம் டிஎன்ஏ பரிசோதனைகளைச் செய்வதுடன் மரபு ரீதியிலான குடும்ப வரைபடத்தையும் உருவாக்குவதற்கு உதவுகிறது.**





# ஏழரைச் சனியும் ஐயப்ப விரதமும்

- மருத்துவர் யோ.யதுநந்தனன்

ஐயப்ப சாமி விரதம் என்பது முறையாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். சரியான முறையில் பிடிக்காது விட்டால் மேலும் பல பாவங்களுக்கு ஆளாவதுடன் ஏழரைச் சனியும் தீவிரமாகப் பிடிக்கலாம்.

இந்தப் பதிவின் நோக்கம் சிலரை வீதியில் பார்த்திருக்கிறேன். கறுப்பு உடை அணிந்து மாலை போட்டிருக்கிறார்கள். ஆனால் வாய் நிறைய வெற்றிலை மென்றபடி ரோட்டு முழுவதும் காறித் துப்பியபடி செல்கிறார்கள். இன்னும் சிலர் இந்தியாவுக்கு கள்ள நகை கொண்டு போகப் பயன்படுத்தப் படுகிறார்கள்.

சில இடங்களிலோ பூசை என்ற பெயரில் இரவிரவாக வீதியெங்கும் ஒலிபெருக்கிகளைப் பூட்டி சுற்று வட்டாரத்தில் ஒரு மாணவன் படிக்க முடியாமல் உள்ளதுடன் வயதான நோயாளிகளையும் அந்தரிக்க விடுகிறார்கள். (ஐயப்ப விரதத்தில் தன்னைத் தான் வருத்தி விரதமிருக்கச் சொல்லியிருக்கே ஒழிய மற்றவர்களை வருத்த அல்ல என்பதை மனம் கொள்ள வேண்டும்)

மேற்சொன்னவை போன்ற பாவச் செயல்களைச் செய்து கொண்டு மாலை போட்டு விரதம் இருப்பதால் எந்தப் பலனும் கிடைக்காது என்பதுடன் கடவுளின் தண்டனைக்கும் ஆளாக வேண்டி வரும். கடந்த காலத்தில் எனக்கு தெரிந்த ஒருவர் தான் கள்ள நகை கொண்டு போகத்தான் இவ்வாறு செய்வதாக கூறி அடிக்கடி இந்தியா போய் வருவார். பாவச் செயல் மாட்டுப்படப் போகிறீர்கள் என்று பல முறை நான் ஆலோசனை வழங்கியும் கேக்கவில்லை. விபத்து ஒன்றில் அகால மரணமடைந்து விட்டார். குடும்பம்



நடுத்தெருவில்.

எனவே அவ்வாறு இல்லாமல் மற்றவர்களை வருத்தாமல் (ஒலிபெருக்கிகளில் அதிக சத்தம் எழுப்புதல் போன்று) முறையாகக் கடைப்பிடிக்க கீழுள்ள பதிவைப் பார்க்கவும்.

மானிடர்களை சனி பகவானின் ஏழரை வருடம் தண்டிக்கிறீர்கள். அவர்களுக்கு நல்லருள் அருளக் கூடாதா என சனீஸ்வரரிடம் ஐயப்பன் கேட்க, அதற்கு அது என் தர்மம், பிரம்மன் படைத்தலும், மகா விஷ்ணு காத்தல், ஈசன் அழித்தன் என வேலையை செய்கின்றனர்.

படைத்தல், காத்தல், அழித்தல் தர்மம் என்றால், அது தடைப்பட்டால் எப்படி சிருஷ்டி இயங்காதோ, அதே போல், நான் கர்ம வினைகளுக்கு ஏற்ப மானிடரைத் தண்டிக்காவிட்டால் என் தர்மம் என்ன ஆகும் என சனீஸ்வர் கேட்டார்.

அதோடு மானிடர்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப தண்டனை அழிக்காவிட்டால் எப்படி சிருஷ்டி இயங்கும் என சனீஸ்வரர் கேட்டார்.

**ஏழரைச்சனி**

சிருஷ்டி என்பது மனிதர்களின் சந்தோசத்திற்கும், ஆனந்த அமைதிக்கும் தான் சிருஷ்டி செயல்படுகிறது. மானிடர்களின் கர்ம வினை பலன்களை தரத்தானே நீ உள்ளாய். சரி என கூறி, ஐயப்பன் பல்வேறு தண்டனைகள் அடங்கிய விதிகள் அதாவது விரதத்தை கடைப்பிடிப்பது குறித்து வாக்கு கொடுத்தார்.

சனீஸ்வரர் தன் ஏழரை ஆண்டு கால பிடியில் ஒருவனுக்கு எப்பேர்ப்பட்ட தண்டனை வழங்குகிறார் என்பதையும், அதற்கேற்றாற்போல் விரதத்தை அமைத்து, சனீஸ்வரரின் தீய பார்வையிலிருந்து தன் பக்தர்களை காக்க ஐயப்பன் விரத முறையை அமைத்தார். ஒரு மண்டல காலம் விரதம் இருக்கும் ஒருவருக்கு சனீஸ்வரரின் கொடும் பார்வையிலிருந்து காத்து அருள கேட்டுக் கொண்டார்.

**ஒரு மண்டலத்தில் ஏழரை ஆண்டு கால தண்டனை**

ஒரு மண்டலம் விரதம் இருக்கும் ஒருவருக்கு, ஏழரை ஆண்டு கால தண்டனையை எப்படி கொடுப்பது என சனி பகவான் கேட்டார்.

சனீஸ்வரரின் ஏழரை ஆண்டு தண்டனை எப்படி ஒரு மண்டலத்தில் பொருந்தும் என்பதை ஐயப்பன் விளக்கினார்.

சனீஸ்வரர்: விதவிதமான உணவு உண்டு, பழ ரசங்களை அருந்தி மகிழும் பலரை, சோற்றுக்கே வழியின்றி அலைய வைப்பேன். அதனால் அவர்கள் பட்டினியிலிருந்து தப்பிக்கவே முடியாது என்றார்.

ஐயப்பன்: தன் பக்தர்கள் எளிமையான உணவை ஒரு பொழுது உண்பார்கள்.

சனீஸ்வரர்: மலர் தூவிய மஞ்சத்தில் உறங்கிய மன்னவனைக் கூட கல்லிலும், மண்ணிலும் உறங்க வைப்பேன் என்றார்.

ஐயப்பன்: என் பக்தர்கள் கட்டிலில் உறங்காமல், வெறும் தரையில் படுத்து உறங்குவார்கள் என்றார்.

சனீஸ்வரர்: முக்கிய விஷயம் என்ன வென்றால், என் பார்வை பட்டால் இணைந்திருக்கும் தம்பதியர் கூட பிரிந்து விடுவார்கள்.

ஐயப்பன்: கடுமையான பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து, சுவாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷத்தை உச்சரித்து, காடு, மேடுகளை கடந்து என் தரிசனத்திற்கு வருவார்கள். அப்படி வரும் பக்தர்களை நீ ஒரு கணம் கூட பிடிக்கக் கூடாது, அவர்களுக்கு சுக சௌக்கியங்களைத் தான் அளிக்க வேண்டும் இது என் அன்பு வேண்டுகோளும், கட்டளையும் ஆகும் என்றார்.

**கறுப்பு உடை**

சனீஸ்வரர்: கட்டிக் கொள்ள உடை இல்லாமல், தலைக்கு எண்ணெய் இல்லாமல், காலுக்கு காலணி இல்லாமல், தன்னை தானே கண்டுகொள்ள முடியாத படி உருவம் சிதைந்து, செயலிழந்து, சக்தியின்றி வாடிப் போக வைத்துவிடுவேன்.

ஐயப்பன்: உனக்கு பிடித்த வண்ணம் கருப்பு தானே. விரத காலத்தில் கருப்பு உடை அணிந்து, காலணி கூட அணியாமல், முடி கூட திருத்திக் கொள்ளாமல், மணி மாலை அணிந்து, சுக சௌக்கியங்களில் ஒதுங்கி நிற்பார்கள்.



அனைவராலும் சுவாமி என அழைக்கப்படுவார்கள். நீங்கள் சொன்ன கஷ்டங்களை எல்லாம் பக்தி சிரத்தையோடு ஏற்று அதை விரதமாக கடைப்பிடிப்பார்கள்.

**விரதம் முக்கியம்**

சனீஸ்வரர்: மனம் மிகு பன்னீரில் குளித்தவர்களைக் கூட, நான் வெறும் தண்ணீருக்கே அல்லாட வைப்பேன்.

ஐயப்பன்: உதயத்திலும், மாலையிலும் பச்சை தண்ணீரில் என் பக்தர்கள் குளிப்பதை பக்தி சிரத்தையுடன் ஏற்பார்கள்.

தர்ம சாஸ்தாவின் இந்த கட்டளையை சிரமேற்கொண்டு சனிபகவான் இன்றும் ஐயப்ப பக்தர்கள் கொடும் பார்வை செலுத்தாமல் நன்மையை செய்து வருகின்றார்.

இப்படி சனிபகவானை ஐயப்பன் சம்மதிக்க வைத்து, தன் பக்தர்களுக்கு இத்தனை கட்டுப்பாடுகளை விரதமாக வைத்துள்ளார். இதன் காரணமாக தான் கருப்பு உடை உடுத்தி ஐயப்ப பக்தர்கள் கடும் விரதம் இருந்து மலைக்கு செல்கின்றனர்.

நாமும் இந்த சரியான காரணத்தை உணர்ந்து ஐயப்ப விரதத்தை சரியாக பின்பற்றி சனிப்பார்வையிலிருந்து தப்பித்து நன்மையை பெற்று மகிழுங்கள்.

சாமியே சரணம் ஐயப்பா..

**[முகநூல் பதிவு]**




**சனீஸ்வரர் தன் ஏழரை ஆண்டு கால பிடியில் ஒருவனுக்கு எப்பேர்ப்பட்ட தண்டனை வழங்குகிறார் என்பதையும், அதற்கேற்றாற்போல் விரதத்தை அமைத்து, சனீஸ்வரரின் தீய பார்வையிலிருந்து தன் பக்தர்களை காக்க ஐயப்பன் விரத முறையை அமைத்தார். ஒரு மண்டல காலம் விரதம் இருக்கும் ஒருவருக்கு சனீஸ்வரரின் கொடும் பார்வையிலிருந்து காத்து அருள கேட்டுக் கொண்டார்.**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் கல்வி tv CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

கல்வி tv CHANNEL-1

**02.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**02.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நிந்தவூர் பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

நிந்தவூர், டிசெ. 02

நிந்தவூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு (வரவு செலவுத் திட்டம்) ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை அமர்வில் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை சபை உறுப்பினர்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட நிந்தவூர் பிரதேச சபையின், குறித்த பாதீடு சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

குறிப்பாக ஆளும் தரப்பான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட ஏனைய கட்சிகளான சிறீலாங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் பாதீட்டை வர வேற்று உரையாற்றியதுடன்,

நாட்டிலும், பிரதேசத்திலும் நிலவும் பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் கஷ்ட நிலை மக்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு சுமை ஏற்றாத வகையில் 2023 பாதீடு அமைந்திருப்பதாகவும்,

சிறந்த, வரவேற்கத்தக்க பாதீட்டை சமர்ப்பித்த தவிசாளர் தாஹிரை வெகுவாகப் பாராட்டுவதாகவும் பாதீட்டு அறிக்கை மீது உரையாற்றிய உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும் தவிசாளர் தாஹிர் சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் சபையின் மொத்த வருமானம் 187244220 ரூபாவாகவும், மொத்த செலவீனம் 187242220 ரூபாவாகவும் மிகை 2000 ரூபாவாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,

இதனை சபை உறுப்பினர்கள் ஏகமனதாகவும் அங்கீகரித்து, பாதீடு நிறைவேறியது.

(அ-06)



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் வர்த்தக கண்காட்சி நேற்று புதன்கிழமை காரைதீவு பிரதான வீதியில் நடைபெற்றபோது காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பார்வையிடுவதைக் காணலாம். (அ)

# தமிழர்களின் உரிமைகளை மறுக்க சரத் வீரசேகர யார்?

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கேள்வி

அம்பாறை, டிசெ. 02

"இலங்கையை ஆண்டு பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழருக்கான காணி போலீஸ் அதிகாரங்களை மறுப்பதற்கு சரத் வீரசேகர யார்? எமது உரிமைகளை நாங்கள் கேட்கிறோம். இடையில் மறப்பதற்கு இவர் யார்?"

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பினார்.




காரைதீவு மனித அபிவிருத்தி தாபன முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த விடுகை விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் தவிசாளர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசுகை யில்-

இலங்கை வரலாற்றில் 1960 களில் சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக நிம்மதியாக வாழ்ந்த வரலாறு இருக்கிறது. ஆனால் இடைநடுவில் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கவேண்டும், அடக்க வேண்டும் என்று கருதி சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் போர்க்கொடி தூக்கிய காரணத்தினால் தான் தமிழ் மக்கள் ஆயுதம் தூக்க வேண்டி ஏற்பட்டது. அதன் விளைவுகளை நாம் அனைவரும் அறிவோம். வேறு வழி இல்லாமல் அன்று ஆயுதம் தூக்கிய தமிழர்கள் சமகாலத்தில் அரசியல் போராட்டத்தை நடத்தி வந்தார்கள்.

மூவின மக்கள் வாழுகின்ற இந்த நாட்டில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் அதிகாரங்களும் உரிமைகளும் சகலருக்கும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும். இன்று அதற்கான காலம் ஓரளவு கனிந்து வருகின்ற வேளையிலே-எண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைத்தது போல் சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் அதனை குழப்ப முயற்சிக்கிறார்கள்.

இவர் போன்றவர்கள் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டிலே அமைதியோ நிம்மதியோ சுதந்திரமோ கிடைக்கப் போவதில்லை.இது மட்டும் நிச்சயம்.

இம் முறை பேரேழுச்சியுடன் இடம் பெற்ற மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் ஒன்றே போதும் எதிர் காலம் எப்படி இருக்கும் என்று. இதனை இவர் போன்றவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த நாட்டில் பூர்வீகமாக காலாகாலமாக ஆண்டு வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு உரிமைகளோ சுதந்திரங்களோ கொடுக்க முடியாது. ஆனால் எங்கிருந்தோ வந்த சீனக்காரர்களுக்கு இந்த நாட்டை தாரை வார்க்க முடியும் . இது என்ன நியாயம்?

புலம்பெயர் நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் இன்றைய இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஆனால் இவர் இனவாதிகளின் பேச்சுக்கள் அந்த உதவியை தடுத்து நிறுத்துகின்றது.

இந்த நிலைமையில் இலங்கை 10 வருடங்கள் போனாலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கும் வரை மீள முடியாது போகலாம்-என்றார். (அ)

# பாடசாலை போசாக்கு உணவு திட்டத்தின் கீழ் சகல மாணவர்களுக்கும் தலா 10 கிலோ அரிசி

அம்பாறை, டிசெ. 02

கல்முனை வலயத்தில் உள்ள கல்முனை அஸ்ஸுஹரா வித்யாலயத்தில் பாடசாலை போஷாக்கு உணவு திட்டத்தின் கீழ் சகலமாணவர்களுக்கும் தலா 10 கிலோ அரிசி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சகல மாணவர்களது பெற்றோர்களுக்கும் அரிசி இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 50,000 மில்லி லீற்றர் கசிப்புடன் மட்டக்களப்பில் இருவர் கைது!

மட்டக்களப்பு, டிசெ. 02

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதூர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இரண்டு வீடுகள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை முற்றுகையிடப்பட்டதுடன் அங்கிருந்து பெருமளவான கசிப்புகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகர் மற்றும் அதன் அண்டிய பகுதிகளில் சட்ட விரோத போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனைகளைத் தடுப்பதற்கு மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் போதையொழிப்பு பிரிவு மற்றும் பொலிஸ் புலனாய்வுத்துறை இணைந்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.




இதனடிப்படையில் மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுத்துறைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் புதூர்ப்பகுதியில் இரண்டு இடங்கள் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் போதையொழிப்புப் பிரிவினால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த பெருமளவான கசிப்பு மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் போதையொழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கஜ நாயக்க, பொலிஸ் சார்ஜன்ட் ரி.கிருபாகரன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த முற்றுகையை மேற்கொண்டனர்.

இதன்போது ஒரு வீட்டிலிருந்து 40,000 மில்லி லீற்றர் கசிப்பும் இன்னுமொரு வீட்டிலிருந்து 10,000 மில்லி லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டதுடன் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களையும் கைப்பற் றப்பட்ட கசிப்பையும் நீதிமன்றில் முன்னி லைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(அ)



## பாகிஸ்தானில் நிலக்கரி சுரங்கம் இடிந்து விழுந்ததில் 9 பேர் மரணம்

இஸ்லாமாபாத், டிசெ. 02

பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணம் ஓரக்சாய் மாவட்டத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தின் மேற்பகுதி திடீரென இடிந்து விழுந்ததில் 9 உயிரிழந்த நிலையில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சுரங்க இடிபாடுகளில் இருந்து 9 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், 4 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். கனிம வளத்துறை அதிகாரிகள் கொண்ட குழு, சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்த நிலையில், எரிவாயு தீப்பற்றியதால் விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. (அ)

### இங்கிலாந்து அணுமின் நிலைய

## கட்டுமானப் பணிகளிலிருந்து சீன நிறுவனம் அதிரடி நீக்கம்!


லண்டன், டிசெ. 02

சீனாவுடனான நாட்டின் 'பொற்காலம்' முடிந்துவிட்டதாக இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் கூறிய ஒரு நாள் கழித்து, புதிய சைஸ்வெல் சி அணுமின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளில் இருந்து சீன நிறுவனம் நீக்கப்பட்டுள்ளது.

சீன அரசுக்கு சொந்தமான சீனா ஜெனரல் நியூக்ளியர் எரிசக்தி நிறுவனமான இந்த திட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, அதற்கு பதிலாக பிரெஞ்சு நிறுவனமாக ஈ.டி.எவ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது என இங்கிலாந்து அரசாங்கம் அறிவித்தது.

அறிவிப்புக்குப் பிறகு, சீனத் தூதரகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது, "ஒரு கொள்கையாக, சீன வணிகங்களுக்கு எதிரான எந்தவொரு பாரபட்சமான நடைமுறைகளையும் நாங்கள் எதிர்க்கிறோம். இங்கிலாந்தில் உள்ள சீன நிறுவனங்களுக்கு இங்கிலாந்து தரப்பு நியாயமான மற்றும் பாரபட்சமற்ற சூழலை வழங்கும் என்று நம்பப்படுகிறது." என தெரிவித்தது.

இந்த ஆலை தற்போது கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சஃபோல்க் கடற்கரையில் கட்டப்பட்டு வருகிறது. இரண்டு ஐரோப்பிய அழுத்த உலைகளுடன் கட்டுமானப் பணிகள் முடிந்ததும், அது தோராயமாக இங்கிலாந்தில் ஆறு மில்லியன் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும். இந்த ஆலையின் செயல்பாட்டின் மூலம்



நாட்டில் 10,000 வேலை வாய்ப்பு கள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுனக்கின் கருத்துக்கள் மற்றும் ஷாங்காயில் கோவிட் போராட்டங்கள் குறித்து செய்தி சேகரிக்கும் பிபிசி பத்திரிகையாளர் தாக்கப்பட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிரதமர் சுனக் நேற்று தெரிவிக்கையில், சீனாவுடனான 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் காலம் முடிந்துவிட்டது என்றார்.

உலக விவகாரங்களில் - உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மை அல்லது கால நிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளில் சீனாவின் முக்கியத்துவத்தை நாம் வெறுமனே புறக்கணிக்க முடியாது. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பலர் இதை புரிந்துகொள்கிறார்கள் என்றார்.

முன்னதாக, ஷாங்காயில் கோவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து நடக்கும் போராட்டங்களில் செய்தி சேகரிக்கும் போது பிபிசி பத்திரிகையாளர் தாக்கப்பட்டதாக கூறப்பட்டதையடுத்து, சீனாவை இங்கிலாந்து கண்டித்திருந்தது. (அ)

# ஐ.எஸ். தலைவர் தாக்குதலில் பலி!

### புதிய தலைவர் பொறுப்பேற்பு

டமஸ்கஸ், டிசெ. 02

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் தலைவர் அபு அல்-ஹஸன் கொல்லப்பட்டதாக, அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அபு ஓமர் அல்-முஹாஜர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள குரல் பதிவின் போது, 'கடவுளின் எதிரிகள்' என்று அழைக்கப்படுபவர்களுடன் சண்டையிடும் போது கொல்லப்பட்டதாகக் கூறினார். ஆனால் அவர் மேலதிக விவரங்களைத் தெரிவிக்கவில்லை.

ஒக்ரோபர் நடுப்பகுதியில் தென்மேற்கு சிரியாவில் கிளர்ச்சியாளர் சுதந்திர சிரிய இராணுவத்தின் நடவடிக்கையில் அபு அல்-ஹஸன் கொல்லப்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் வடமேற்கு சிரியாவில் அமெரிக்க படைகள் மேற்கொண்ட தாக்குதலின்போது, ஐ.எஸ். அமைப்பின் அப்போதைய தலைவர் அபு இப்ரா



ஹிம் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அபு அல்-ஹஸன் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார்.

இப்போது அவரும் கொல்லப்பட்டது அந்த அமைப்புக்கு பின்னடைவாக கருதப்படுகிறது. அவருடைய கொலைக்கு யாரும் பொறுப்பு ஏற்கவில்லை.

அபு அல்-ஹாசனைப் பற்றி மிகக் குறைவாகவே அறியப்பட்டது, அவர் தலைவராக தனது பெயரில் எந்த அறிக்கையும் வெளியிடவில்லை.

இந்தநிலையில், அமைப்பின் அடுத்த தலைவராக அபு அல்-ஹூசைன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக, செய்தித் தொடர்பாளர் அபு ஓமர் அல்-முஹாஜர் தெரிவித்தார்.

முந்தைய அறிவிப்பைப் போலவே, செய்தித் தொடர்பாளர் தனது உண்மையான பெயர், தேசியம் அல்லது பின்னணியை வெளியிடுவதைத் தவிர்த்தார்.

மேலும், அபு அல்-ஹூசைனை மூத்த முஜாஹிதின்களில் ஒருவர் என விபரித்த அவர், குழுவின் ஆதரவாளர்கள் அவருக்கு விசுவாசமாக இருக்குமாறு வலியுறுத்தினார். (அ)

## போதைப்பொருள் பாவனையினால் தாய்லாந்தில் பிக்குகள் பதவி நீக்கம்

பாங்கொக், டிசெ. 02

தாய்லாந்தின் மத்தியப் பகுதியிலிருக்கும் பௌத்த விகாரை ஒன்றில் இருந்த அனைத்து பிக்குகளும் போதைப் பொருள் பாவனை தொடர்பான பரிசோதனையில் தோல்வியடைந்தமையால் அவர்கள் அனைவரும் மதக்கடமைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அங்கு மதக்கடமையிலிருந்த நான்கு பிக்குகளிடம் நடத்தப்பட்ட சோதனையில் அவர்கள் மெத்தாம்பெட்டமைன் எனும் போதைப் பொருளை பாவித்திருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து அந்த நான்கு பிக்குகளும் வைத்திய பரிசோதனை மற்றும் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார்கள் என உள்ளூர் அதிகாரியான பூன்லெர்ட் திண்டபதி கூறியுள்ளார்.

பிக்குமார் மீதான நடவடிக்கை காரணமாக பெட்சாபுன் மாகாணத்தில் புங் சாம் பான் என்ற மாவட்டத்திலுள்ள அந்த சிறிய அந்த பௌத்த விகாரையில் அனைத்து மத வழிபாடுகளும் முற்றாக தடைப்பட்டுள்ளன.

"அந்த விகாரையில் இப்போது வழிபாடுகளை நடத்த பிக்குகள் இல்லை, அதனால் அருகில் உள்ள கிராமங்களிலுள்ள மக்கள் தமது நன்னெறிகளில் ஒன்றான பிக்குகளுக்கு தானங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர்" என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மக்களின் கவலைகளை அடுத்து அங்கு வேறு விகாரைகளிலிருந்து பிக்குகளை அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என பூன்லெர்ட் திண்டபதி அறிவித்தார்.

மாகாணத்தின் தலைமை பௌத்த தேரருடன் இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

தாய்லாந்தில் பௌத்த பிக்குகள் முறை தவறி நடந்துகொள்வது இது முதல் முறையோ அல்லது ஒரு தனியான சம்பவம் அல்ல அவர்கள் பொது வெளியில் பல சந்தர்ப்பங்களில் மோசமாக நடந்துகொண்டுள்ளமை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் தாய்லாந்தில் உயர்நிலைகளில் உள்ள பிக்குகள் ஊழல்கள், கொலைகள் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தல் ஆகியவை தொடர்பில் பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி கைது செய்யப்பட்டனர். (அ)



## டெஸ்லா நிறுவனத்தின் ஊழியருக்கு 6 விதிகள்

நியூயோர்க், டிசெ. 02

டெஸ்லா நிறுவன உரிமையாளரான எலன் மஸ்க் 6 புதிய விதிகளை தமது ஊழியர்களுக்கு விதித்துள்ளார்.

தமது ஊழியர்கள் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையற்ற சந்திப்புகளை தவிர்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது போன்ற சந்திப்புகளால் எந்தவித பங்களிப்பும் இல்லை என்றும் அவர் கருதுகிறார்.

உற்பத்திக்கு உதவாத இது போன்ற கூட்டங்கள் தேவையின்றி நேரத்தை வீணடிப்பதாக அவர் தமது ஊழியர்களுக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார். கடுமையான உழைப்பில் கவனம் செலுத்துமாறும் எலன் மஸ்க் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அண்மையில் 1,200 ஊழியர்கள் கெடுபிடிகளை விரும்பாமல் இராஜினாமா செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலைகளுக்கு ஒரு நாள் விடுமுறை

கொழும்பு, டிசெ. 02

2022 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமையுடன் நிறைவடைவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் 05 ஆம் திகதி ஆரம்பமாகி மூன்று கட்டங்களின் கீழ் இடம்பெறவுள்ளது.

அதன்படி, அன்றைய தினம் முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை முதற்கட்டமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் நடைபெறும்.

அதன்பின்னர், டிசெம்பர் 23ஆம் திகதி முதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை நத்தார் பண்டிகைக்காக பாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்காக, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு அம்மாதம் 20ஆம் திகதி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மகிந்த அரசியலில் இருந்து இனி ஒதுங்கிவிடவேண்டும்

## மொட்டுக்குள் வலுக்கின்றது எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 02

ஸ்ரீலங்கா பெரமுன கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளிவரும் நிலையில், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டும் என்ற கருத்து அந்தக் கட்சிக்குள் இருந்து எழ ஆரம்பித்திருக்கின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தினரிடையே ஏற்பட்டுள்ள மோதல்களே இதற்குக் காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னரான மக்கள் எதிர்ப்பால் ராஜபக்ஷவினர் தங்கள் பதவிகளில் இருந்து விலகவேண்டிய சூழ்நிலை உருவானது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய அமைச்சரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமவிங்கவால் நியமிக்கப்பட்ட போதும், அது இன்னமும் முழுமை பெறவில்லை.

அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்திருக்கும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் வலியுறுத்தல்களைக் காதில் போட்டுக்கொள்ளாது செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னணியில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் உள்ளார் என்றும் பேசப்படுகின்றது.

தனது சகோதரர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியுற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ இப்போது அனைத்து விடயங்களிலும் கடும்பிடியில் இருக்கின்றார் என்று கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
Sri Lanka Podujana Peramuna

இந்தநிலையில், மகிந்த இனி அரசியலில் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

இதற்கு முன்னர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல,

மகிந்த இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவை அனைத்தையும் செய்துவிட்டார். மகிந்தவின் தலைமைத்துவம் இல்லை என்றால் இப்போதும் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். அவர் 80 வயதை நெருங்குகின்றார். அவர் ஓய்வெடுப்பது நல்லது. யாரும் அவரை அவர்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தினால் அதற்கு நான் இணங்கமாட்டேன்.

நெல்சன் மண்டேலாவின் மரணத்தின்போது உலகத் தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

அப்படியொரு கௌரவம் மகிந்தவுக்குக் கிடைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார். (அ)

# 56 வீதமானோர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு விருப்பம்!

கொழும்பு, டிசெ. 02

இலங்கையில் வாழும் 56.8 வீதமானவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாட்டில் வசிக்க விருப்பத்துடன் இருப்பதாக கருத்து கணிப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது.

மாற்று கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் நடத்திய புதிய கருத்து கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இலங்கை மக்களில் 41.5 வீதமானவர்கள் இலங்கையில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

18 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களில் 77.2 வீதமானவர்கள் இலங்கைக்கு வெளியில் வேறு நாட்டில் வசிக்க விருப்பம் தெரிவித்திருப்பது மிகவும் முக்கியமான விடயம்.

30 வயதுக்கும் மேற்பட்டவர்களின் கருத்து

22 வீதமானவர்களே நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாட்டில் வசிப்பதை விரும்பவில்லை.

30 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 45 வீதமானவர்கள் மாத்திரம் நாட்டில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். 52.5 வீதமானவர்கள் நாட்டில் இருந்து வெளியேற விரும்பவில்லை என கூறியுள்ளனர். (அ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிதமான மழை கிடைக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடகீழ் பருவக்காற்றுடன் வங்காள விரிகுடாவில் கீழைக் காற்றுக்களும் இணைந்திருப்பதன் காரணமாக எதிர்வரும் 4ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பரவலாக மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்.நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அருகே குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி உருவாகும் வாய்ப்புள்ளது. எனவே 4ஆம் திகதி வரையில் மிதமான மழை கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

இவ்வாண்டு இதுவரை 04 தாழமுக்கங்கள் வங்காள விரிகுடாவில் உருவாகின. எனினும் ஒரு தாழமுக்கம் மட்டுமே எமக்கு மழையைத் தந்துள்ளது.

இரண்டு தாழமுக்கங்கள் அவைக்கு அண்மையில் தோன்றிய உயரமுக்க நிலைமைகளால் தமது ஈரப்பதன் கொள்ளளவை இழந்து வரண்ட காற்றாகவே வீசின. ஒரு தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்ததனால் எமக்கு எந்த கைய பயனையும் தரவில்லை.

எங்களின்( வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்) விவசாய, நீர்ப்பாசன, நீர்வழங்கல் என தரைமேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீருடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கும் ஆற்றல் மிகுந்ததாக வடகீழ்ப்பருவக் காற்றினால் கிடைக்கும் மழைவீழ்ச்சி விளங்குகிறது.

கடந்த 20 ஆம் திகதி வரையான நிலைமைகளின் படி, இவ்வாண்டு வடக்கு மாகாணத்தின் சராசரி மழை வீழ்ச்சியை விட (1240 மி.மீ) 130 மி.மீ. மழைவீழ்ச்சியை கூடுதலாக நாம் பெற்றுவிட்டோம்.

வழமையாக வடக்கு மாகாணத்தின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சியில் 65 வீத பங்களிப்பு செய்யும் வடகீழ் பருவக்காற்று இவ்வாண்டு 22 வீதம் மட்டுமே பங்களித்துள்ளது. இதற்கு காரணம் இவ்வாண்டு முழுவதும் பரவலாக எமக்கு கிடைத்த மழைவீழ்ச்சியே.

ஆனால் பெருநிலப்பரப்பின் பல குளங்கள் தமது கொள்ளளவில் அரைப்பகுதியைக் கூட பூர்த்தி செய்யவில்லை. வன்னியின் பல பகுதிகளில் வயல்களுக்கு தற்போதே நீர்ப்பாசன வசதிகளை வழங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் தற்போது பயிரிடப்பட்டிருக்கும் நெற்பயிர்செய்கைக்கு அதன் விளைவு காலத்தில் கூட நீர் வழங்க முடியாத நீர்ப்பற்றாக்குறையை நாம் எதிர்கொள்ள நேரும்.

அடுத்த வருட சிறுபோகத்தை பற்றி சிந்திக்க கூட முடியாத நிலை ஏற்படும். மழையை நம்பி மட்டுமே மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாண மாவட்ட நெற்செய்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் பயிர்கள் வாடிவிட்டன.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் வாரங்களில் எமக்கு நிச்சயமாக ஒரு பெரு மழை அவசியம். தற்போதைய வளி மண்டல நிலைமைகளின் படி எமக்கு மழை கிடைக்கும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

எனினும் வளிமண்டல நிலைமைகள் பல்வேறு காரணங்களால் மாற்றமடையலாம். பூகோள காலநிலை மாற்றம் உலகளாவிய ரீதியில் மழைவீழ்ச்சியில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. எமது மழைவீழ்ச்சிப் பாங்கும் மாற்றமடைந்து வருகின்றது-என்றார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் THUYAR.NET .நெற்
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# மூன்று மனித எச்சங்கள் முல்லைத்தீவில் சிக்கின!



முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியில் சென்ற வாரம் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் தோண்டப்பட்டன.

இதன்போது மூன்று மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆண் மற்றும் பெண் ஒருவருடையதும் ஒரு சிறு குழந்தை ஒன்று என கருதப்படும் மனித எச்சங்களும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

வேலி புனர் நிர்மாணப் பணிகளுக்காக குழி தோண்டியபோது இந்த மனித எச்சங்கள் குறித்த காணி உரிமையாளரினால் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் புதுக்குடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து அங்கு காவல் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதுடன் நீதிமன்ற உத்தரவிற் கமைய தோண்டும் பணிகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் இடம்பெற்ற அகழ்வுப் பணியில் சட்ட வைத்திய அதிகாரி, புதுக்குடி பொலிஸார் உள்ளிட்ட பல தரப்புக்களும் பிரசன்னமாகியிருந்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவர்களுடையதாகக் கருதப்படும் இந்த உடல் எச்சங்களுடன் இரண்டு சயனைற் குப்பிகளில் ஒன்று முழுமையாகவும் ஒன்று உடைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டன. (அ)

# எந்தவொரு தனிநபரையும் எதிர்கொள்ள நான் தயார்!

## மைத்திரிபால திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 02

எந்தவொரு தனிநபரையும் அரசியல் ரீதியாக எதிர்கொள்ளத் தயார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளளேன். எனக்கு சவால் விடுக்கும் சில நபர்கள் தற்போது அரசியல் வனாந்தரத்தில் உள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் பொது வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்.

நாட்டுக்கு சிறந்த வேலைத்திட்டத்தை வகுக்



குமாறு பல்வேறு பதாகைகளின் கீழ் பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறேன் -என்றார். (அ)

# 2014 ஆம் ஆண்டு முதல் கட்டாரில் 343 இலங்கைத் தொழிலாளர் பலி!

கொழும்பு, டிசெ. 02

2014 ஆம் ஆண்டு முதல் கட்டாரில் பணியாற்றிய 343 இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் இறப்புக்கான காரணம் இயற்கை மரணம், தற்கொலை, கொலை, வீதி விபத்து, ஏனைய விபத்துகள், கொரோனா இறப்புக்கள் மற்றும் உறுதிப்படுத்தப்படாத மரணங்கள் என பட்டியலிடப்பட்டுள்ளது.

அதன்படி, 207 இயற்கை மரணங்கள், 30 தற்கொலை இறப்புகள், 6 வீட்டுக் கொலைகள், 50 வீதி விபத்துகள், 35 ஏனைய விபத்துகள், 14 கொரோனா வைரஸ் இறப்புகள் மற்றும் ஒரு உறுதிப்படுத்தப்படாத மரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளன. அதன்படி, 29 இயற்கை மரணங்கள், 4 தற்கொலைகள், ஒரு கொலை, 12 வீதி விபத்துகள் மற்றும் 6 உறுதிப்படுத்தப்படாத மரணங்கள் பதிவாகியுள்ளதாக விவரிக்கப்பட்டுள்ளன.

அதேபோல 2020 இல் மிகக் குறைவான இறப்புகள் பதிவாகியுள்ளன. அதன்படி, 13 இயற்கை மரணங்கள், 2 தற்கொலை மரணங்கள், 3 இல்லக்கொலை மரணங்கள், 2 விபத்துக்கள் மற்றும் ஒரு உறுதிப்படுத்தப்படாத மரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடம் ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையில் மாத்திரம் 37 இறப்புகள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சைட்டம் தனியார் கல்லூரியை மீண்டும் திறக்க நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 02

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியை மீண்டும் திறக்க முடியும் என முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாடசாலைக் கல்வி மற்றும் உயர்கல்வி குறித்து பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் நேற்று நடந்தன.

அங்கு ஜனாதிபதி மற்றும் பல கட்சி-எதிர்க்கட்சி பிரதிநிதிகள் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டனர்.

சைட்டம் சட்டபூர்வமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகவும் தேவைப்பட்டால் மீண்டும் திறக்க முடியும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

உங்கள் அனைவருக்கும் பிடித்திருந்தால் மீண்டும் அதனை ஆரம்பிப்போம் என்றும் கூறினார்.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும் நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க விருப்பம் தெரிவித்தனர். (அ)

# யாழ்ப்பாணம் - சென்னை இடையே 12ஆம் திகதி முதல் விமான சேவை

கொழும்பு, டிசெ. 02

யாழ்ப்பாணம் - சென்னை இடையேயான விமான சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த ஆரம்ப பணிகளுக்காக நேற்று முன்தினம் சுற்றுலா அதிகார சபையில் இருந்து இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

2019ஆம் ஆண்டு திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமானது 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொரோனா பரவல் காரணமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரியரின் சம்பளத்தில் 15 வீதம் புடைவை வாங்குவதற்கு செலவு!

கொழும்பு, டிசெ. 02

ஒரு ஆசிரியரின் சம்பளத்தில் 15 சதவீதம் கல்வி அமைச்சின் ஆடைக் குறியீட்டுக்கு இணங்க புடைவைகள் மற்றும் அது தொடர் பான ஆடைகளை வாங்குவதற்கு செலவிடப் படுகிறது என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள் ளது.

ஜப்பானின் கியூஷூ பல்கலைக்கழ கத்தின் கலாநிதிப் பட்டதாரியான லஸ்னி புத்திபாஷிகா ஜயசூரிய நடத் திய ஆய்வில், இலங்கையில் ஆசிரியர் கள் தங்களது சம்பளத்தில் கணிசமான பகுதியைத் தங்கள் ஆடைகளுக்காக மட்டுமே செல விடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, ஆசிரியர்கள் சேலைக்காக நிறைய பணம் செலவழிக்கிறார்கள் என்றும் ஒரு ஆசிரியரின் சம்பளத்தில் 15 வீதம் சேலை தொடர்பான செலவு களுக்கு செலவிடப்படுவதாக அவர் கூறினார்.

மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களில் இலங்கைப் பெண் ஆசிரியர்களின் ஆடைகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புடைவை என்பது ஆறு யார் துணி மட்டுமல்ல அதற்கு புடைவை ஜாக்கெட், லைனிங் துணி, தையல் கட்டணம், புடைவைக்கு ஏற்ற கீழ் பாவாடை மற்றும் காலணிகள் என்பனவும் வாங்கவேண்டுமென அவர் விளக்கினார்.

மேலும் புடைவையை துவைப்பது, இஸ்திரி போடுவது மற்றும் அணிவதற்கும் கணிசமான அளவு நேரம் எடுக்கும் என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# மத்திய வங்கி ஆளுநரிடம் மன்னிப்பு கோரிய ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, டிசெ. 02

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளதாக ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மத்திய வங்கியின் ஆளுநர் தொடர்பில் அண்மையில் வெளியிட்ட கருத்து பொய்யானது எனவும் இவ்விடயம் தொடர்பில் தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறினார்.

கடந்த வாரம் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட ஆஷு மாரசிங்க, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நந்தலால் வீரசிங்க தயாராகி வருகிறார் என குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பில் தேவையான பிரசார நடவடிக்கைகளை கலாநிதி நந்தலால் வீரசிங்க ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் பேராசிரியர் ஆஷு மாரசிங்க மேலும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# உலகக் கிண்ண உதைபந்து; அடுத்த சுற்றில் குரோஷியா!

டோஹா, டிசெ. 02

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் குழு எவ்வில் குரோஷியா, மொராக்கோ அணிகள் 16 அணிகள் சுற்றுக்குள் நுழைந்தன.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில் நேற்றிரவு சமநேரத்தில் இரு போட்டிகள் நடந்தன. குழு எவ் அணிகளிடையே நடந்த இந்தப் போட்டிகளில் ஒன்றில் கனடா - மொராக்கோ அணிகளும் மற்றையதில் குரோஷியா - பெல்ஜியம் அணிகளும் மோதின.



கனடா - மெராக்கோ அணிகளின் மோதலில் போட்டி ஆரம்பித்த 4ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து அசத்தியது. ஹக்கீம் ஷியேச் அந்த அணிக்காக முதல் கோலைப் போட்டார். தொடர்ந்து அந்த அணியின் யூசுப் என் நெஸிரி 23ஆவது நிமிடத்தில்அடுத்த கோலை அடித்து அதிர்ச்சி கொடுத்தார்.எனினும், கடுமையா கப் போராடிய கனடா 40ஆவது நிமிடத்தில் பதில் கோல் போட்டது. நயீப் அகார்ட் அந்தக் கோலை அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காத நிலையில், போட்டியை 2 - 1 என்ற கணக்கில் மொராக்கோ வெற்றி பெற்றது.

இதேசமயம், குரோஷியா - பெல்ஜியம் மோதிய மற்றைய போட்டி கோல் எதுவும் அடிக்கப்படாமலே சமநிலையில் முடிவடைந்தது.

புள்ளிப் பட்டியலில் முன்னிலையில் இருந்த மெராக்கோ எதிர்பார்த்தபடியே 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றது. இதேபோல குரோஷியாவும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. இந்தப் போட்டியில் கனடா எந்தப் போட்டியிலும் வெற்றி பெறாது மோசமாகத் தோல்வியடைந்து வெளியேறியது. (ஐ)

## புதிய விடியல் உதைபந்து காலிறுதி இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 02

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். லீக்குடன் இணைந்து நடத்தும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் காலிறுதி போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை ஆரம்பமாகின்றன. இன்று வெள்ளிக்கிழமை 3.45 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடக்கும் போட்டியில் சென். பிலிப்ஸ் - சென். நீக்கிலஸ் அணிகள் மோதவுள்ளன. (ஐ)

## மரண அறிவித்தல்



**திருமதி**
**சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை**

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், செட்டியார் தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை கடந்த 28.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தியலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிந்தாமணி குணசிங்கம் அவர்களின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, திருமதி தெய்வயானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பிரமணியம், திருமதி சின்னத்தம்பி கார்த்திகேசு, குமாரசாமி, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியும், சத்தியவரதன் (கட்டைப்பிராய்) நிர்மலா (நல்லூர்) கிருபாவரதன் (நெடுந்தீவு) கோகுலவரதன் (லண்டன்) சந்திரகலா (நல்லூர்) விஜயலதா (லண்டன்) பத்மவரதன் (கனடா) தவமேகலா (லண்டன்) பாணுகலா (பிரான்ஸ்) அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மஞ்சுளா (கட்டைப்பிராய்) சிறிகரன் (நல்லூர்) பாக்கியலட்சுமி (நெடுந்தீவு) சகுந்தலாதேவி (லண்டன்) புவனேந்திரா (நல்லூர்) தர்மரட்ணம் (லண்டன்) பொன்மதி (கனடா) செல்வராசா (லண்டன்) சபேசன் (பிரான்ஸ்) ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரன், குகப்பிரியன், ஜனகன், துவாரகன், மகீபன், நிரூஜன், கினோஜா, மதுசன், நிரோசன், கிந்துஜன், அபியதர்சன், விட்டலன், லக்ஷினி, ஜானுசா, தனுசா, அனுராஜ், அபிராஜ், பாணுசன், டினோசா, கவிசன், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**077 982 5051**

தகவல்:
**குடும்பத்தினர்**

# புதிய விடியல் உதைபந்தாட்டம் பாடும்மீன், யூனியன் வெற்றி!

யாழ்ப்பாணம், டிசெ. 02

புதிய விடியல் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன், ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் வெற்றி பெற்றன.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது.

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று வியாழக்கிழமை நடந்த போட்டிகளில் ஒன்றில் குருநகர் பாடும்மீன் - வதிரி டைமன்ஸ் அணிகள் மோதின. இதில், 4 - 1 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் - கலைமதி அணிகள் மோதின. இதில், ஆனைக்கோட்டை யூனியன் 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் 16 அணிகள் சுற்றில் ஆர்ஜென்ரீனா

டோஹா, டிசெ. 02

உலகக் கிண்ணத்தின் 16 அணிகள் சுற்றுக்கு ஆர்ஜென்ரீனா தகுதி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில், நேற்று நள்ளிரவு இரு போட்டிகள் நடந்தன.

ஒரு போட்டியில் ஆர்ஜென்ரீனா - போலந்து அணிகள் மோதின. இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் போடப்படவில்லை.

இரண்டாவது ஆட்டம் ஆரம்பமான ஒரு நிமிடத்திலேயே - 46ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணிக்காக அலெக்சிஸ் மைக் அலிஸ்ரர் கோல் அடித்தார்.

இதனைத் தொடர்ந்து கோல் எண்ணிக்கையை அதிகரிக்க ஆர்ஜெனரீனாவும் கோல் நிலையை சமப்படுத்த போலந்தும் கடுமையாக முயற்சித்தன.

தொடர்ந்த ஆட்டத்தில், ஜூலியன் அல்வெரெஸ் 67ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவுக்காக கோல் அடித்தார்.




இறுதியில் 2 -0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா சி பிரிவில் முதலிடம் பெற்று 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றது. இந்தப் போட்டியில் போலந்து தோல்வி அடைந்தாலும் இரண்டாமிடத்தைப் பெற்ற போலந்தும் 16 அணிகள் சுற்றுக்குள் நுழைந்தது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.